RECEIVED
PERIODICALS

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 | மாசி 15 | ஜ. ஆகி 17 | இதழ் 17
யாழ்ப்பாணம் | வியாழக்கிழமை | 27-2-1986

## பிலிப்பைன்ஸில் நிம்மதி மூச்சு



(மணிலா)
''கம்யூனிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் ஆயுதப்போராட்டத்தைக் கைவிடவேண்டும்'' என்று பிலிப்பைன்ஸின் புதிய ஜனதிபதி திருமதி அக்கினே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னள் ஜனதிபதி மார்க்கோஸ் பிலிப்பைன்ஸைவிட்டு வெளியேறிய 12 மணி நேரத்திற்குப்பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்படி வேண்டுகோளை அவர் விடுத்தார்.

இருபது ஆண்டுகளுக்கு பின்னர் இப்பொழுதுதான்மக்கள் நிம்மதி மூச்சு விடுகின்றனர் என்றும் அவர் கூறினர்.

[5 ம் பக்கம் பார்க்க]

## ● இலங்கை இனப் பிரச்னே: பஹத் கோருகிறர்

# "ஒருமாதகாலத்தில் தீர்வுகாண இலங்கை முன்வரவேண்டும்!

## அப்பாவி மக்கள் கொலை நடக்காது என்று இலங்கை அரசு உறுதியளிக்கவேண்டும்"

(புதுடில்லி)

"இலங்கை இனப்பிரச்னேக்கு ஒரு அரசியல் தீர்வுகாண, காலம் கடந்து கொண்டிருக்கிறது. ஒரு மாத காலத்துக்குள் இலங்கை இனப் பிரச்னேக்கு தீர்வுகாண இலங்கை அரசு முன்வரவேண்டும்" என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. ஆர். பஹத் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

இலங்கை இனப்பிரச்னே குறித்து இந்திய லோகசபையில் (பாராளுமன்றத்தில்) நேற்று கொண்டுவரப்பட்ட கவனயீர்ப்பு தீர்மானத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயேதிரு பஹத் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

திரு பஹத் மேலும் கூறியதாவது;

''இலங்கை இனப்பிரச்னே குறித்து ஆலோசனே நடத்த கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவரை இங்கு அழைத்துள்ளோம். அவர் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு எமது கருத்துக்கள் தெரிவிக்கப்படும்.

''இலங்கையில் அப்பாவி மக்கள் கொலேசெய்யப்படுவது இனப்படுகொலேக்கு ஒப்பாகும் அப்பாவி மக்கள் கொலே செய்யப்படுவது குறித்து பாரபட்சமற்ற விசாரணேயை இலங்கை அரசு நடத்த வேண்டும். அத்துடன், அப்பாவி மக்கள் இனி

(5ம் பக்கம் பார்க்க)

## 'சி' இணைப்பு சிக்கலேத் தீர்க்க உதவுமாம்!

(கொழும்பு)

இனப்பிரச்சனேத் தீர்வில் ஏற்பட்டுள்ள தடங்கல்களே அகற்றி ஒரு நியாயமான தீர்வினேக் காணுவதற்கு 'சி-இணைப்பு'ஏற்பாடுவகை செய்யுமெனவும் அது கரிசனேயுடன் மீளாய்வு செய்யப்படவேண்டுமெனவும் இலங்கை அரசு வட்டாரங்களே ஆதாரங்காட்டி 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது

தமிழர் இனப்பிரச்னேக்குத் தீர்வுகாணவென நடத்தப்பட்ட சர்வகட்சி மகாநாட்டில் 'சீஇணைப்பு' ஏற்பாடு யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் பின்னர் அரச தரப்பால் மறுதலிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இனப் பிரச்னே: இந்தியா நிர்ப்பந்திக்கப்படுகிறதாம்

[புதுடில்லி]

இலங்கை இனப்பிரச்னேக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டுமென்ற தனது நிலைப்பாட்டினே இந்திய அரசு இன்னும் கைவிடாத வேளேயில் நாள்தோறும் இலங்கைத்தமிழர்கள் கொல்லப்படுவதைத்தொடர்ந்து திரு. ராஜீவ் காந்தி இலங்கை ப் பொறுத்த அணுகுமுறையில்

[5ம் பக்கம் பார்க்க]

## "கறுப்புக்கொடிகளே பறக்கவிடுங்கள்"

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலுள்ளவர்த்தக நிலையங்களே இன்று பூட்டி கறுப்புக்கொடிகள்தொங்கவிடுமறு யாழ். வர்த்தக சங்கச் செயலாளர் திரு. எஸ். நமசிவாயம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ் நகரிலுள்ள முக்கிய சந்திகளிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் செல்லும் பாதைகளிலும கறுப்புக கொடிகளேப் பறக்கவிடுமாறும் அந்தவேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

சகல வர்த்தகர்களும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபற்றி தங்கள் எதிர்ப்பை அரசுக்கும் உலகிற்கும் காட்டுமாறு அவர் கேட்டுள்ளார்.

(க)

## உடும்பன்குளம் படுகொலேச் சம்பவம்:

# விசாரணேக்குழு முன்பாக சாட்சியமளிக்க அச்சம்!

(மட்டக்களப்பு)

திருக்கோவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள உடும்பன்குளம் களத்துமேட்டில் இடம்பெற்ற விவசாயிகள் தொழிலாளர் படுகொலேச் சம்பவம் குறித்து அரசவிசாரணேக்குழுமுன் படுகொலே செய்யப்பட்டவர்களின் உறவினர் சாட்சியமளிக்க அச்சப் தெரிவிப்பதாக பிரஜைகள் குழு அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு அக்கரைப் பற்றுப் பிரஜைகள்குழு நேற்றுக்கூடி படுகொலேசம்பவம் தொடர்பாக நீண்டநேரம் ஆலோசனே நடத்தியது

இச்சம்பவம் தொடர்பாகக் குழுமுன் சாட்சியமளித்தால் தாம் அரச படைகளால் பழி வாங்கப்படக்கூடும் என்று அஞ்சுவதால் சாட்சியமளிக்க மாட்டார்கள் என்று பிரஜைகள் குழு பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## தி மு. க. முன்னணியில்....

(சென்னே)

தமிழ்நாடு பேரூராட்சித் தலைவர் பதவிகளுக்கான தேர்தலில், 571 முடிவுகள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன

[5ம் பக்கம் பார்க்க]

## மீண்டும் இணுவிலே வட்டமிட்ட விமானம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய், இணுவில், தாவடி ஆகிய பகுதிகளுக்கு மேலாக போர் விமானமும், ஹெலிகொப்டரும் நேற்றுப் பிற்பகல் பல தடவை வட்டமிட்ட வண்ணமிருந்தன.

இப்பகுதிகளில் கடந்த 19ம் திகதி மாலே இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலின் அதிர்ச்சியிலிருந்து இன்னமும் மீளாதிருக்கும் மக்கள், நேற்றுப் பிற்பகலும் விமானம் சுற்றி வட்டமிட்டதைத்தொடர்ந்து பெரும் பதற்ற நிலேக்குள்ளானுர்கள்

விமானம் பிற்பகல் 5 மணியளவில் கிழக்குத்திசை நோக்கிப் பறந்து மறைந்து சென்றது. (மா)

## இராணுவத்தினரால் சுடப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதித்த இளேஞர் கடத்தப்பட்டார்

(முல்லேத்தீவு)

முல்லேத்தீவு வைத்தியசாலேக்குப் பின் பக்சமாக மினிவான் ஒன்றிலிருந்து இறங்கி ஓடிய இரண்டு இளேஞர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு இளேஞர் காயமடைந்தார். மற்றவர் கைது செய்யப்பட்டார்

இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் நடந்தது. காயமடைந்தவர் சிலாவத்தையைச் சேர்ந்த கயிலாயநாதன் என்றும் மற்றவர் திருகோணமலே அகதி என்றும் தெரியவருகிறது.

இருவரும் இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு

[5ம் பக்கம் பார்க்க]

## அந்த அதிகாலேயில் எழுந்த 'ஞானேதயம்!'

[வாஷிங்டன்]

அமெரிக்காவின் நெவாடா மாநிலத்தில் செனட்டர் போல் லக்ஸால்ட்டின் இல்லம்.

அதிகாலே மூன்று மணி இருக்கும்.

தொலேபேசி அலறுகிறது

செனட்டர் போல் லக்ஸால்ட்டின் தொலேபேசியை எடுக்கிறர்.

செனட்டர்: ''ஹலோ!''

மார்க்கோஸ்; ''நான்தான் மார்க்கோஸ் பேசுகிறேன் நாட்டில் ஒரே பிரச்னேயாயுள்ளது. என்ன செய்யலாம்?''

செனட்டர்: ''நீங்கள் என்ன யோசிக்கிறீர்கள்?,'

(5ம பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய புதிய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். [C 911]

[புறொயிலர்) இறைச்சிக்கு தேவையான கோழிகள்மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: Red Rose Farm தெணியம்பைதெரு, வல்வெட்டித்துறை. (C962)

## தேவை

வட்டு தொகுதியில் எப்பகுதியிலாவது சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. விளம்பர இல C-952 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C-952

சிறந்த பெரியரக இராசவள்ளிக்கிழங்கு, கறணைக்கிழங்கு பெருந்தொகையாகக் கொள்வனவு செய்யப்படும், உடன் தொடர்பு கொள்ளவும்; C. கணேசன், 286, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். [C961

## தவறிவிட்டது

தேசிய அடையாள அட்டை இலக்கம் 502042890V மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரமும் கொண்ட பை ஒன்று கைதடிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் T. S. Moorthy, 392/2, K. K. S. Rood, Jaffna என்னும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். [C 964]

## தவறிவிட்டது

இலக்கம் 456990274 V அடையாள அட்டையும் இன்னும் சில பத்திரங்களும் கொண்ட நாவல் நிற ஓலைக்கைப்பையுடன் 25-ம் திகதி காலை மானிப்பாய் சந்திக்கும் உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. சண்டு எடுத்தவர்கள் திருமதி வி வீரவாகு, உடுவில் மகளிர் கல்லூரி, சுன்ணாகம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். C 965

## வகுப்புகள்

பங்குனி மாதம் தொடக்கம் வார இறுதி நாட்களில் தையல் வகுப்புகள் Scientific Cutting and Embroidery, Singer Diploma பட்டம்பெற்ற ஆசிரியையினால் நடாத்தப்படவுள்ளது. தொடர்பு கொள்க: சோ. யோகநாதன், 16, விதானையார் வீதி, சுண்டுக்குளி. [C963]

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ


# பொதுமக்கள் அதிருப்தி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் அனுமதி எதுவுமின்றி திடீரெனத் தோன்றியுள்ள மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களையிட்டு இப்பகுதி பொது மக்கள் அதிருப்திதெரிவித்துள்ளனர்.

பண்டத்தரிப்பு சமாதான சபை, கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றிற்கும் இது குறித்து முறைப்பாடு செய்யத் பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு சுகாதார பரிசோதகர் திரு. பொ. பேரின்பநாதன் இந்த சட்ட விரோத இறைச்சிக் கடைகளை பொது நலன் கருதி மூடுமாறு சம்பந்தப் பட்டவர்களை கேட்டுள்ளார்.


பின்னுறுதிக்கட்டளை

## அறிவித்தல்

சாவகச்சேரி

மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற செல்வி நவீனு பொன்னே கனகதுங்கத்தினது மரண சாதனமற்ற சொத்துக்களின் விடயத்தில்:

— மரணமெய்தியவர்.

1. திருமதி அருந்ததி கிருபாகரன்
2. முத்தையா கிருபாகரன் இருவரும் இல. 54, 4ம் குறுகுத் தெரு, யாழ்ப்பாணம் தற்போது, கண்டிவீதி, சாவகச்சேரி.

— மனுதார்கள்

வழக்கு இல: 228/ரீ

எதிராக

1. செல்வி விமலா கனகதுங்கம், இல. 54, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், தற்போது கண்டி வீதி, சாவகச்சேரி.
2. சந்திரன் உவாற்சன் பொன்னே சனகதுங்கம் இல 54,4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தற்போது டுபாய். தனது அற்றோனியராகிய 1ம் எதிர்மனுதார் செல்வி விமலா கனகதுங்கம் மூலம்:

— எதிர்மனுதார்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு மாசிமாதம் 2ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்காகக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு தை மாதம் 30ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆ. குணநாயகம்
பதிவாளர்

தயாரித்தவர்கள்:
பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்
மனுதாரின் சட்டத்தரணிகள்

மறுதவணை 19-3-86.

ஆ. குணநாயகம்
பதிவாளர்
13-2-86

C 928


# "'ருகிங்' போன்ற அடக்குமுறைகளை பலாத்காரத்தினுல் மட்டும் தீர்க்க முடியாது"

## மாணவரவை நம்பிக்கை

(யாழ்ப்பாணம்)

''எமது சமூகத்தில் நிலவிவரும் சீதனமுறை, சாதிப் பாகுபாடு, பெண்கள்மீதான அடக்குமுறைக் கருத்தோட்டம் போன்றதொரு சீர்கேடாக 'ருகிங்' விளங்கிவருகிறது. இதனையும் படிப்படியாக சிந்தனைத் தெளிவூட்டுவதன் மூலமன்றி பலாத்காரத்தினுல் மட்டும் தீர்க்க முடியாது என்று தாம்நம்புவதாக யாழ் பல்கலைக்கழக மாணவர் அவை நேற்று வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவித்துள்ளது. அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

.''ருகிங்'கை படிப்படியாக இல்லாதொழிப்பதற்குப் பல்கலைக்கழகத்தில் நடவடிக்க எடுக்கப் பட்டிருக்கின்றன. மேலும் இதுசம்பந்தமாக நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் படும் என்றுஉறுதிகூறுகிறோம்.

''இம்முறைகூட இதுவரை நிர்வாகத்திடம் அல்லதுமாணவரவையிடம் கொடுக்கப்பட்ட சில குற்றச்சாட்டுக்கள் நிர்வாகத்தின் விசாரணையிலுள்ளன. (22-2-86ல் யாழ்நகரில் வெளியாகிய பத்திரிகைகளில் உபவேந்தரின் அறிக்கையைப் பார்க்கவும்) இவைதவிர வெளியிலே பிரசாரம் செய்யப்பட்டதுபோல மாணவியொருவர் மீதான பாலியல் சித்திரவதை சம்பந்தமான குற்றச்சாட்டு எந்தவொரு நபராலும் நிர்வாகத்திடமோ மாணவரவையிடமோமுறையிடப்படவில்லை இனிமேலும் ஏதாவது குற்றச்சாட்டுக்கள் யாராவது சமர்ப்பிக்குமிடத்து மிகத்தீவிரமாக விசாரிக்கப்பட்டு குற்றவாளி மீது மிகக்கடுமையான நடவடிக்கைகள் எடுக்க நாம்தயங்கமாட்டோம் என்பதை உறுதி கூறுகிறோம்.

''ருகிங்' சம்பந்தமாக பல்கலைக்கழக ஆசிரியசங்கம் விடுத்துள்ள அறிக்கைபற்றி அவர்களுடன் மாணவரவை தொடர்புகொண்டபோது உடலியல் ரீதியான வடுக்கள் என்று அறிக்கையின் ஒரு பகுதியில் குறிப்பிட்டிருந்தது, மாணவிகள் மீதான எந்தவொரு பாலியல் ரீதியான சித்திரவதைகளையும் குறிப்பிடுவதாகாது என்று உறுதியாகத்தெரிவித்துள்ளார்கள்.''

''இதிலிருந்து ஒரு பாரதூரமான பொய்யான குற்றச்சாட்டைத் தெரிவித்தவர்கள் அல்லது அது உண்மையாக இருந்தாலும்கூட அனுமதிக்குத் தேவையான புள்ளிகள் /Marks) என்ற தகுதியை மட்டுமே பெற்று பல்கலைக்கழகத்தில் நுழைந்திருக்கக்கூடிய அந்தக் கேடுகெட்ட வக்கிர உணர்வுமிக்க விதிவிலக்கான விஷப் பிராணியை நிர்வாகமூலம் விசாரித்தறிந்து அம்பலப்படுத்தி தகுந்த தண்டனை வழங்கக் கூடியதாக இருந்தும் அதைச் செய்யாமல் பொதுமக்கள் மத்தியிலே முழுமையாக பல்கலைக்கழக மாணவர்கள் அனைவர்மீதும் களங்கம் கற்பிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பின்னணி என்ன? அடிப்படை நோக்கம் என்ன? என்பன சந்தேகத்திற்குரியவையே

கடந்த காலங்களில் ஆயுதப் படையினராலோ, இயற்கையின் அனர்த்தங்களாலோ அகதிளாக்கப்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணம். முல்லைத்தீவு, வவனியா, திருமலை, கிளிநொச்சி, மட்டக்களப்புப் போன்ற எல்லா இடங்களிலும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களினுல் நிவாரணப் பணிகள் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கான பணத்தையும், பொருட்களையும் பொதுமக்களிடம் சேகரித்தும் வேறு நிறுவனங்களிடம் பெற்றும் முக்கியமாகப் பல்வேறு பட்ட விடுதலை ஸ்தாபனங்களின் ஒத்தாசையுடனும்

(7-ம் பக்கம் பார்க்க)


TELEVISION ENGINEERING COURSE

6 MONTHS — WEEKENDS
THEORY AND PRACTICALS

தொலைக்காட்சியின் தத்துவ விளக்கங்களையும் தொழில்நுட்பங்களையும் தெளிவுறப் பயின்று கொள்வதற்கும்,

T. V. Sets
Video Tape Decks

ஆகியவற்றை நவீன எலெக்ரோனிக் சாதனங்களைக் கொண்டு பழுதுபார்க்கும் அறிவினையும் பயிற்சியையும் எமது நவீன ஆய்வுகூடத்தில் பெற்று நாளைய உலகின் தொழில் நுட்பச் சாதனைகளுக்கு இன்றே உங்களைத் தயார் படுத்திக் கொள்ளுங்கள்.

விரிவுரையாளர்: Mr. E. கணபதிப்பிள்ளை

ஆரம்பம்: 9-3-86 ஞாயிறு 10-00 மணிக்கு

கட்டணம் மாதம் ரூ. 250/-

CANTABIA INSTITUTE,
21, Main Street,
Jaffna.
T. Phone — 24201

A 297


# கனகரத்தினம் ம.ம வித்தியாலயம் மெய்வல்லுனர் போட்டி

[மானிப்பாய்]

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி வரும் வெள்ளிக் கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப் போட்டியில் தொழிலதிபர் திரு. சோ. கணேசசுந்தரம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார் திருமதி சந்தினி கணேசசுந்தரம் பரிசில்களை வழங்குவார்.

## தூவானம்

காலை:
10-05 இலங்கை - பாகிஸ்தானுக்கிடையே1ம் டெஸ்டின் 4 ம் நாள் ஆட்டம்

மாலை:
5-25 செய்திகள்
5-30 ஆங்கில போதனை நிகழ்ச்சி
5-45 'உங்களால் முடியுமா? நிகழ்ச்சி
6-00 சிறுவர் நிகழ்ச்சி
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 'பிலிசண்தா' (பேட்டி)
7-25 :ரஸ கலச' கலை நிகழ்ச்சி
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 'கரடிய' பாலர் நிகழ்ச்சி
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-20 'மைனட் யுவர் லங்குவேஜ்'
9-55 உலக யுத்தம்
10-50 ஒளிபரப்பு முடிவு

# தவக்காலச் சிந்தனை



14 ம் நாள்

## உண்மை மதம்

இறைவன் மோயீசனுக்கு சட்டங்களை கொடுத்தார். மோயீசனிடமிருந்து யோசுவாவுக்கும், பின்பு மூப்பர்களுக்கும், அதர்களிடமிருந்து இறைவாக்கினர்களுக்கும், பின்பு சட்ட வல்லுனர்களுக்கும், பரிசேயர்களுக்கும் வழங்கப்பட்டது யேசு காலத்திலிருந்த பரிசேயர்களும் சட்ட வல்லுனர்களும் போதித்தார்கள். ஆனுல் அவர்கள் வாழ்வில் முரண்பாடுளும், வேடமும் மலிந்தன. கட்டளைகளை பாரச்சுமைகளாக மக்களில் திணித்தார்கள்.

ஆனுல் மதம் சுமையானது. பாசாங்கும், நடிப்பும், ஏமாற்றமும் வளர உண்மைத்தனம் மறைந்து மதம் என்ற போர்வையில் தலைவர்கள், சுய கௌரவத்தையும், பட்டம், பதவியையும் தேடினர். இதனுல் மதம் சுயநலவாதிகளின் சாக்கடையானது

போதனையும் சாதனையும்
ஒன்றானவரே குரு
அழுத்தும் சுமைகளை
தகர்த்தெறிபவரே தெய்வம்
தன்னைத் தாழ்த்தி
பணி செய்வதே தலைவன்

என உரைத்து சீர் திருத்துகிறார் கிறிஸ்து, இதுவே உண்மையான மதம்.

சுவாமி ஜீவா போல்
அ. ம. தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகச் செய்திகள்

# "பிலிப்பைன்ஸ் மக்களின் நீண்டகால வேதனைகள் மறைந்துவிட்டன!"

## ஜனாதிபதி அக்கினோ கன்னி உரை

(ராய்ட்டர்)

**முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸும், அவரது குழுவினரும் பசுபிக் தீவான 'குவாம்' சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அமெரிக்க அரசாங்கம் திருமதி அக்கினோவை பிலிப்பைன்ஸின் புதிய ஜனாதிபதியாக அங்கீகரித்துள்ளது.**

தான் ஜனாதிபதியாகப் பதவியேற்று சிறிது நேரத்துக்குள்ளேயே, மார்க்கோஸ் தனது மனைவி கமெல்டா மார்க்கோஸ் முன்னர் ராணுவத்தளபதி தனது உதவியாளர்களுடன் நாட்டைவிட்டு வெளியேறினார். பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க விமானத்தளமொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'டிசி-9' விமானப்படை விமானத்தில் ஏறி 'குவாம்' சென்றார்.

ஜனாதிபதி மார்க்கோஸ் பதவியைத் துறந்துவிட்டார் என்ற தகவலை அமெரிக்காவே முதலில் தெரிவித்தது.

இதனைத் தெரிவித்த அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ட்ஸ். 'திருமதி அக்கினோவை ஜனாதிபதியாக அங்கீகரிக்கும் அமெரிக்க மக்கள், திருமதி அக்கினோ அகிம்சைப் போராட்டத்தின் மீது வைத்துள்ள உறுதியைப் பாராட்டுகிறார்கள்' என்றார்.

சட்டபூர்வமான ஜனாதிபதியாகிய பின்னர் திருமதி அக்கினோ உரையாற்றுகையில் 'நீண்டகாலமாகப் பிலிப்பைன்ஸ் மக்கள் அனுபவித்து வந்த வேதனைகள் இன்றுடன் மறைந்துவிட்டன' என்று பெருமிதத்துடன் கூறினார்.

பிலிப்பைன்ஸிலுள்ள அமெரிக்க பாதுகாப்புப் படைத்தளங்களை 1691ம் ஆண்டு வரை நீடிப்பதுபற்றிய ஒப்பந்தத்தைத்தான் கௌரவிப்பதாகவும், அதன் பின்னால் ஒப்பந்தத்தைத்தான் நீடிப்பது பற்றி இன்னமும் முடிவுசெய்யவில்லை எனவும் கூறினார்.

இதனிடையே மார்க்கோஸ் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார் என்பதை அறிந்த பிலிப்பைன்ஸ் மக்கள் வீதிகளில் ஆடிப்பாடி மகிழ்ந்ததாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மணிலாவிலுள்ள ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்ட மக்கள் மாளிகையின் யன்னல் கதவுகளை உடைத்ததுடன் அங்கிருந்த பொருட்களையும் கொள்ளையடித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி அக்கினோ 83-ம் ஆண்டில் கொலை செய்யப்பட்ட முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் பெனிக்னோ அக்கினோவின் மனைவியாவார். [செ]

## ஈரானின் குற்றச்சாட்டு: விசேட குழு விசாரிக்கும்

[நியூயோர்க்]

வளைகுடாப் போரில் ஈராக் இரசாயன ஆயுதங்களைப் பாவிக்கிறது என்ற ஈரானின் குற்றச்சாட்டுக் குறித்து விசாரிப்பதற்காக ஐ. நா. பாதுகாப்புச் சபை விசேட குழுவொன்றை தெஹ்ரான் அனுப்பவுள்ளது,

நான்கு நிபுணர்களைக் கொண்ட இந்தக் குழு இதன் முன்னரும் ஒரு தடவை ஈராக்கின் இரசாயன ஆயுதங்களால் பாதிக்கப்பட்ட ஈரானிய ராணுவத்தினரைப் பரிசோதித்து அறிக்கை தயாரித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## எதிர்ப்புரட்சியாளரை வெளியேற்றக் கோரிக்கை

[காபூல்]

ஆக்ரிதி மற்றும் ஷென்வாரியைச் சேர்ந்த பாஸ்தூண் ஆதிவாசிகள் தமக்கு எதிரான தண்டனை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் பாகிஸ்தானிய ராணுவத்திற்கு எதிராகத் தொடர்ந்தும் எதிர்ப்புக் காட்டிவருகின்றனர்.

செய்பர் கணவாய் பகுதியில் தாம் மேற்கொண்டுள்ள ராணுவ முயற்சிகள் தாம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்பதைப் பாகிஸ்தான் அதிகாரிகள் இப்போது கண்கூடாகக் கண்டுவருகின்றனர். பாஸ்தூண்களிடம் உயர்ந்தரக ஆயுதங்கள் இல்லாதபோதிலும் இவர்கள் தமது பிரதேசங்களிலிருந்து எதிர்ப்புரட்சியாளர்களை வெளியேற்றுமாறு கோரிக்கை விடுத்துவருகின்றனர்.

# 13 இராணுவ அதிகாரிகளுக்கு மரணதண்டனை!

[லண்டன்]

நைஜீரிய ராணுவ அரசைக் கவிழ்க்கச் சதிசெய்ததாக முன்னாள் அமைச்சர் ஒருவர் உட்பட 13 ராணுவ அதிகாரிகளுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நைஜீரிய ஜனாதிபதியான ஜெனரல் பார்பன்கியூடாவின் விமானத்தைக் கடத்தி அவரைக் கைதுசெய்து அதன்மூலம் ஆட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டதற்காகவே இந்தத் தண்டனை அளிக்கப்பட்டது.

நைஜீரிய ராணுவ நீதிமன்றம் ஒன்றினால் வழங்கப்பட்ட இத்தண்டனைகள் வெகு விரைவில் நிறைவேற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [செ]

# இலங்கை இனப்பிரச்னை: ஐரோப்பிய பொருளாதார சமூகம் கவலை!

[ராய்ட்டர்]

இலங்கையின் இனப் பிரச்னைக்குச் சமாதானத் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகள் அனைத்தும் இதுவரை வெற்றியளிக்காதது குறித்து ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

நெருங்கிய அரசியல் ஒத்துழைப்புப்பற்றி ஆராய்வதற்காக ஒல்லாந்து தேசத்தின் தலைநகரான ஹேக்கில் கூடிய இச்சமூகத்தின் மகாநாடு நேற்று முன்தினம் கூடிய போதே இக்கவலை தெரிவிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள அனைத்துக் கட்சிகளும் தமக்கிடையேயுள்ள பிரச்னைகளைச் சமாதான அடிப்படையிலான பேச்சுவார்த்தைகளின்மூலமே தீர்த்துவைக்க முயலவேண்டும் என்றும், இனப் பிரச்னைக்கு ஐக்கிய இலங்கை என்ற அமைப்பினுள்ளே இப்பிரச்னையைச் சமரசமாகத் தீர்த்து வைக்கவேண்டுமென்றும் இம்மகாநாடு கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையின் இனப் பிரச்னையைச் சமரசமாகத் தீர்த்து வைக்க இந்தியா எடுத்துவரும் முயற்சிகளையும் இம்மகாநாடு வெகுவாகப் பாராட்டியுள்ளது [செ]

## மட்டுநகர் தபாலகத்தில் கொள்ளை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலுள்ள உப-தபால் கந்தோரில் 1 640 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளும் ரொக்கப்பணமும் நேற்றுமுன்தினம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன

இனந்தெரியாதநான்கு நபர்கள் இக்கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## அணு ஆயுத ஒழிப்பு: சோவியத் புதிய யோசனை

(மாஸ்கோ)

உலகத்தின் அணு ஆயுதங்களை ஒழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக அணுஆயுதங்கள் வைத்துள்ள ஐந்து நாடுகளைக் கொண்ட 'சர்வதேச பாதுகாப்புத்துறை' ஒன்றை ஸ்தாபிக்க வேண்டுமென சோவியத் தலைவர் திரு. மிக்கேல் கோபச்சேவ் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 27வது மாநாட்டை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். நாட்டில் நிலவும் லஞ்சம், ஊழல் போன்றவற்றைக் கண்டித்துப் பேசிய அவர் நாட்டு மக்கள் புதிய நேர்மையான வாழ்க்கைக்குத் தம்மை தயார் படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கோரினார்.

சர்வதேச விவகாரங்களைப் பற்றிக் அவர் குறிப்பிடுகையில் அமெரிக்காவின் ராணுவ அடாவடித்தனத்தை வன்மையாகக்குறை கூறினார்.

ஆப்கானிஸ்தானின் தொடரும் பிரச்னையை 'ஒரு இரத்தம் சிந்தும் காயம்' என வர்ணித்த அவர் இப்பிரச்னையைத் தீர்க்க சம்பந்தப்பட்டவர்களிடையே பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த 25 ஆண்டுகளில் சோவியத் நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மிக முக்கிய மானதென்றாகக் கருதப்படும் இம்மாநாட்டுக்குசுமார் 5000 பிரதிநிதிகள் நாடெங்கிலும் இருந்து வருகை தந்திருந்தனர். (செ)

## இந்தியாவிலிருந்து கடல்கீழ் 'கேபிள்!'

[புதுடில்லி]

இந்தியாவுக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கும் இடையே கடலின் கீழே 'கேபிள்' அமைக்கப்படவுள்ளது.

பம்பாயிலிருந்து ஆரம்பமாகும் இந்தக் கடல்கீழ் கேபிள், இந்தியாவிலிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்துடன் நேரடித் தொலைபேசி வசதியை ஏற்படுத்திக்கொடுக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [செ]

## நுண்ணலை மாநாடு

[புதுடில்லி]

ஆசிய-பசுபிக் பிரதேசங்களின் நுண்ணலைப் பயன்பாடு மாநாடு நேற்று முன் தினம் புதுடில்லியில் ஆரம்பமாகியது

ஐந்து நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் இம்மாநாட்டை இந்திய தொடர்புதுறை அமைச்சர் திரு. ராம் நிவாஸ்மிர்தா ஆரம்பித்து வைத்தார்

சுமார் 350 இந்திய விஞ்ஞானிகளும் தொழில் நுட்ப அதிகாரிகளும் பல்வேறு ஆசிய பசுபிக் நாடுகளின் பிரதி நிதிகளும் பங்கு பற்றுகிறார்கள்.

ஆசியாவிலேயே முதன் முதலாக கூட்டப்படும் நுண்ணலைகளின் பற்றிய மாநாடு இதுவென்பது குறிப்பிடத் தக்கது. [செ]

## பொலிஸாருக்கு வழங்கியஅதிகாரம் வாபஸ்

[கொழும்பு]

மலையகத்தில் வன்செயல்களில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கருதப்படும் சந்தேக நபர்களைத் தோட்டங்களுக்குள் சென்று கைது செய்ய பொலிஸாருககு வழங்கப்பட்ட அதிகாரம்வாபஸ் பெறப்பட்டுள்ளது.

தோட்டங்களினுள் சென்று சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டு 48 மணித்தியாலங்களின் பின்னரே இந்த உத்தரவு மீள வாபஸ் பெறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ள பொலிஸ் தலைமையகம் வன்செயல்களில் சம்பந்தப்பட்டவர்களென கைது செய்வதை நிறுத்துமாறும், கைது செய்தவர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறும் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையங்களைப் பணித்துள்ளதாகத் தெரியவருகிறது. [ய-செ]

# இந்திய - பாக். உறவுகளில் விரிசல் ஏற்படுகிறது!

## இந்திய அமைச்சர் ஒத்துக்கொள்கிறார்

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தான் உறவுகளைச் சீராக்க அண்மைக்காலமாக எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் பெரும் முட்டுக்கட்டை நிலையை அடைந்துள்ளன என்பதை இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பகத் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்திய பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையிலேயே இதனை அவர் ஒப்புக்கொண்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், சீக்கியத் தீவிரவாதிகளுக்குப் பாகிஸ்தானில் பயிற்சியளிக்கப்படுவது குறித்து எமக்குத் தகுந்த ஆதாரங்கள் உண்டு எனக் கூறினார்.

இந்தியாவில் வாழும் சில சிறுபான்மை மக்கள் அங்குபல வித பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகிறார்கள் எனப் பாக். அமைச்சர் ஒருவர் கூறியிருப்பது, இந்தியாவின் உள்நாட்டு விஷயங்களில் பாகிஸ்தான் தலையிடுகிறது என்பதையே காட்டுகிறது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்தியாவும், பாகிஸ்தானும் இரு வெவ்வேறு நாடுகளாகப் பிரிந்ததிலிருந்து இரு நாடுகளிடையே மூன்று யுத்தங்கள் நடைபெற்றதும் அவற்றிற்கிடையேயான உறவுகளும் மிகவும் மோசமடைந்திருந்தன இவ்வுறவுகளைச் சீராக்கும் பொருட்டு பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக் கடந்த டிசம்பர் மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [செ]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அல்லற்பட்டு ஆற்றுது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

—குறள்

[மக்கள் வளர்ச்சியே அரசனது வளர்ச்சியாகும்]

## நமது நோக்கு

# நீதியின் நெறி

எதிர்பாராத விரைவில் அக்கினோ பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக பதவி ஏற்றிருப்பது எவ்விதத்திலும் ஒரு அதிர்ச்சியான செய்தியல்ல; ஆனால் பிலிப்பைன்ஸ் மக்களின் ஒன்றுபட்ட உறுதியே இந்தவெற்றிக்குக் காரணம் என்பதை நாம் உணர்வது அவசியம்.

அமெரிக்காவின் 'கையாள்' போன்ற கடந்த கால பிலிப்பைன்ஸ் ஆட்சி கவிழ்ந்ததற்கு அமெரிக்க ஆட்சியே துணைக் காரணமென்றால், இன்று ஜனாதிபதி மார்க்கோஸ் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு சில மணித்தியாலங்களுக்குமுன்னர் 'நானே ஜனாதிபதி' என்று சபதம் செய்தமை எதனைக் காட்டுகிறது?

நாட்டின் பிரதம நீதியரசரே மார்க்கோஸை புதிய ஜனாதிபதியாகச் சத்தியப் பிரமாணம் செய்து வைத்தாரென்றால் அங்கு நிலவிய குழப்ப நிலை எத்தகையதென்பதை நாம் யூகிக்க முடியும்.

இந்தச் சிக்கலை நீக்கி வைத்ததும் அமெரிக்க ஜனாதிபதி றீகன் என்றால் அது மிகையான கருத்தல்ல.

20 வருட கொடுங்கோலிலிருந்து நாடு மீட்கப்பட்டதை மட்டும் நாம் மக்கள் தீர்ப்பாகக் கொள்ளலாம். அதற்குமேல் புதிய ஆட்சி எவ்வகையில் பலம் பெறும் என்பது நாட்டின் அரசியற் கொள்கை மக்கள் ஆட்சிக்கு உகந்த வகையில்எவ்வாறு 'திருத்தி' அமைக்கப்படுமென்பதில் தங்கியுள்ளது.

மக்கள் தீர்ப்பு என்னும் போது ஆட்சிக்கெதிராக வளர்ந்து வந்த எதிர்ப்பு முனைப்புக் கொள்வதற்கு உதவியது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அக்கினோவின் கொலைச் சம்பவமே.

இதனையடுத்து மக்களைத் தீவிரப்படுத்த திருமதி அக்கினோவிற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது.

மாறுபட்டோரை ஒறுக்கும் திறம் கற்புடைய மாதருக்கு அதிகம் உண்டு சிலப்பதிகாரத்தில் கண்ணகியிடம் இதனைப் பார்க்கிறோம். எனவே கணவனை இழந்த போது இன்றைய ஜனாதிபதி திருமதி அக்கினோ வன்மையின் வடிவம் கொண்டது. கற்பின் திண்மையைக் குறிக்கின்றது.

இந்த லட்சிய வாழ்வு இன்றைய உலகின் அதிகார அரசியலுக்கு எவ்வாறு பொருந்தும் என்ற சந்தேகமே இன்றைய தலையங்கத்தைத் தூண்டியது.

பிலிப்பைன்ஸில் நடந்து முடிந்தது ஒரு பொதுத்தேர்தல் மட்டுமல்ல; அதன் விளைவு சாதாரணமான ஒரு தீர்ப்பை வழங்கவில்லை. எனவே இன்றும் அங்கு தொடர்ந்து நடப்பது ஒரு புரட்சி

புரட்சியென்றால் நிச்சயம் பெரும் போர் உண்டாக வேண்டுமென்பதல்ல; அதற்கும் பிலிப்பைன்ஸில் போதிய சந்தர்ப்பம் சூழ்நிலை உருவாகியிருந்தது. அமெரிக்க ராணுவம்தான் அதற்கு முற்றுப்புள்ளிவைத்திருக்கிறதென்று கொள்வது தவறு.

கோடிக்கணக்கான மக்கள் நிராயுதபாணிகளாக இருந்தபோதும் அவர்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பு நீதியென்ற அத்திபாரத்தில் அமைவதால் அவர்களைப் படை வீரம் என்ன செய்யும்? இதனைப் பிலிப்பைன்ஸ் பொதுமக்கள் பரீட்சித்திருக்கின்றனர்.

உலக வரலாற்றில் வெற்றி வீரர்களாக விளங்கியவர்கள் எல்லாரும் உலக நன்மையைக் கருதிப் பழைய வழிகளைவிட்டுப் புது வழியில் வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள்.

புரட்சியுணர்வுக்குப் பொறுப்பெடுத்திருக்கும் திருமதி அக்கினோ தம்முடைய தலைமையில் கொடுமையும் ஆத்திரமும் தலைகாட்டாமல் அன்பும் அமைதியும் நிலவும் வகையில் மக்கள் ஆட்சிக்கு வழிவகுக்க வேண்டும்

நாடு இதுகாறும் சென்ற வழியில் செல்வது அறநெறி அல்ல. உண்மையைக் கடைப்பிடிக்காமல் முன்னேற்றம்கிட்டாதென்பதை ஆட்சி துறந்த ஜனாதிபதி பற்றி வெளிவரும் பயங்கர தகவல்கள் பறைசாற்றும்.

மக்களின் ஒன்றுபட்ட மனச்சான்றே, ஆட்சியின் மனச்சான்றாக,செயல்களின் நன்மை தீமைகளை, நீதி அநீதிகளை ஆராய்ந்து முடிவு காணவேண்டியதே ஆட்சித் தலைவரின் இன்றியமையாத பொறுப்பு.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி, என்றும் மக்களின் விசுவாசத்தைக் கொண்டதல்ல; எனவே ஜனநாயக ஆட்சியில் பொதுத் தேர்தல் என்ற அரசியல்சாதனம் முதன்மை பெறுகிறது.

வெற்றிபெறும் கட்சியின் கற்பு தேர்தலின் புனிதத்தில் தங்கியிருக்கிறது. மக்கள் ஆணையைப் பெற்ற ஆட்சி அடுத்த தேர்தல் வரை ஏமாற்று அரசியல் நடத்துமானால் தீர்ப்பு முன் தெரிந்த விடயமே!

இதிலிருந்து தப்புவதற்கு கோணல்வழியில் தொடரும் ஆட்சிக்கு யார் பக்க பலமாக இருந்தாலும் ஏழை மக்களின் கண்ணீர் சாவு மணி அடிக்கும்.

இந்தநாட்டின் விவகாரங்கள் பிலிப்பைன்ஸ் போன்றதல்ல; ஆனால் அடிப்படை கருத்து ஒன்று இதற்கும் பொருந்தும். பொதுவாக நன்மையில் நாட்டமும், தீமையில் அச்சமுமுடையராய்வாழும் பொதுமக்களை நீதிக்கு மாறாக ஒடுக்கும் அரசு எவ்வித முன்னறிவித்தலுமின்றி வேரோடு சரியும்.

# சோவியத் யூனியனில்

## தேசிய இனங்களுக்கு சமத்துவம்

[சோவியத் கம்யூனிஸ் கட்சியின் இருபத்து ஏழாவது மகாநாடு, நேற்று முன்தினம் 25-ம் திகதி ஆரம்பமானது. இதனையொட்டி இச்சிறப்புக் கட்டுரை இடம் பெறுகிறது]

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்புபற்றி நாடு முழுவதிலும் விவாதம் நடக்கிறது. சோவியத் யூனியனில் தேசிய இனங்கள் பிரச்னை தீர்க்கப்பட்டவிதத்தை சோஷலிசத்தின் குறிப்பிடத்தக்க சாதனையாக அந்த தஸ்தாவேஜு வர்ணிக்கிறது. தேசிய இனங்களுக்கிடையேயான பூசல்கள் பழங்கதையாகி. சோவியத் மக்கள் அனைவரிடையேயும் சகோதரத்துவ நட்புறவும் நெருங்கிய ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் நிலவுகின்றன.

தேசிய இனங்கள் சம்பந்தமான சோவியத் கொள்கை எங்ஙனம் செயல் படுகிறது என்பதை வி. ஸ்தரோஸ்தின் என்ற பத்திரிகையாளர் விளக்குகிறார்.

சமுதாய அமைப்புக்கள், பொருளாதார, கலாசார நிலைமைகள், அவற்றிற்கிடையே உள்ள இடைவெளிகள் முதலியவற்றினால் தேசிய இனப்பிரச்னை பெரிதும் பாதிக்கப்படுகின்றது. எனவே சோவியத் ஆட்சியின் ஆரம்ப காலம் முதலே, முன்பு பிற்

'அவதானி'

பட்ட நிலையில் இருந்த குடியரசுகள் வளர்ச்சி அடைந்த குடியரசுகளிலிருந்து உதவி பெறத் தகுதி பெற்றிருந்தன. உதாரணமாக 1929-ம் ஆண்டுக்கும் 1938-ம் ஆண்டுக்கும் இடையே தாஜிக்கிஸ்தானின் வரவு செலவில் 90 சதவிகிதம் ரஷ்ய சமஷ்டி பட்ஜெட்டில் அடங்கியிருந்தது. பழைய ரஷ்ய சாம்ராஜ்யத்தின் புறவெளிக் குடியரசுகளின் பொருளாதார வளர்ச்சி விகிதம், சோவியத் யூனியனின் சராசரி வளர்ச்சி விகிதத்தைவிட அதிகமாக இருந்தது. முதல் இரண்டு ஐந்தாண்டு திட்டக் காலங்களில் அனைத்து யூனியன் தொழில்கள் 9 மடங்கு அதிகரித்தன அவற்றில் கிர்கீசியாவில் தொழில்கள், 94 மடங்கும், தாஜிகிஸ்தானின் தொழில்கள் 157 மடங்கும் அதிகரித்தன.

கல்வியும் இதேபோல் வளர்ந்தது 1920-ம் ஆண்டில் சோவியத் மத்திய ஆசியக் குடியரசுகளில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் தொகை 10 சதவிகிதம் முதல் 15 சதவிகிதம் தான். ஆனால் அந்தப் பிரதேசத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் தொகை 1939-ம் ஆண்டுக்குள் அனைத்து யூனியன் சராசரி அளவை எட்டி விட்டது. இப்பொழுது சோவியத் யூனியனில் ஒன்றுபட்ட பொருளாதாரக் கூட்டமைப்பு ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு குடியரசின் பொருளாதாரமும், சமுதாய ரீதியாகப் பிரிக்கப்பட்ட உழைப்பில் முக்கியமானதாகும்; நாட்டின் மொத்தச் செல்வத்திற்கு அது பங்காற்றுகிறது. குடியரசுகளின் இயற்கையான பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ற உற்பத்தித் துறைகளில் குடியரசுகள் கவனம் செலுத்துகின்றன. எனவே இது லாபகரமாகவும், ஒட்டு மொத்த சோவியத் பொருளாதாரத்திற்கு அவசியமானதாகவும் உள்ளது.

சோவியத் யூனியனின் அமைப்பும், பரஸ்பர நட்புறவு ஏற்படுத்தப்பட்டதும் சோவியத் சமுதாயத்தின் கலாசார முன்னேற்றத்தையும் தீவிரப்படுத்தின - -துர்க்மேனியா பற்றிய விவரங்களை மீண்டும் எடுத்துக் காட்டுவது ஒன்றே போதும் - - சோஷலிசப்புரட்சிக்கு முன்னால் துர்க்மேனியாவில் ஆயிரத்தில் ஏழு பேருக்குத்தான் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தது; இப்பொழுது அங்கு மக்கள் அனைவரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக உள்ளனர். அதன் இலக்கியம், சினிமா, நாடகம் முதலிய அனைத்தும் வளம் பெற்றுள்ளன.

இதற்கு முன் எப்பொழுதுமே ஒரு குடியரசு, இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இவ்வளவு சாதனை புரிந்ததில்லை. "ஏராளமான மொழிகள் பேசும் ஏராளமான மக்கள் இனங்களையும், வியக்கத்தக்க அளவு பலவிதமான கலாசாரங்களையும் கொண்ட சோவியத் யூனியனை உலகத்திற்கே ஒரு முன்னுதாரணமாகக் காட்டலாம்" என்று பிரபல பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியரான ஆர்னல்டு டாயின்பி எழுதினர்.

## மக்கள் கருத்து

### யாழ்தேவி சம்பவம்:

## மாணவர் விளக்கம்

கடந்த செவ்வாய்க்கிழமை மக்கள் கருத்து என்ற பகுதியில் யாழ்தேவியில் ஓர் அனுபவம் என்ற தலைப்பில் வெளிவந்த ஓர் தனிநபரின் கருத்துக் கண்ணோட்டத்தை யாழ். பல்கலைக்கழக மாணவரவை முற்றாக நிராகரிக்கின்றது. மேலும் அவ்விடயம் சம்பந்தமான உண்மைநிலையை இங்கு தருகிறோம்.

மகாபொல புலமைப்பரிசில் பெறுவதற்காக கொழும்பு சென்ற -ம் வருட மாணவர்கள் சுமார் 350 பேரும் யாழ். புகையிரத நிலையத்திலிருந்து புறப்பட்டபோது ரயிலில் எந்தவொரு பகுதியையும் மாணவர்களுக்கென ஒதுக்காத நிலையில் அவர்கள் எதிர்நோக்கிய [ஆனையிறவு தடைமுகாமில்] பிரச்னைகளை முன்னிட்டு மதவாச்சியில் ரயில்மாறும் போது 3 கொம்பாட்மென்கள் இவர்களுக்கென ஒதுக்கப்பட்டது. அதில் பயணம்செய்த ஏனைய பிரயாணிகளுக்குத் தெரிந்ததே.

அதேபோன்று கொழும்பிலிருந்து யாழ் நோக்கி புறப்படும்போது மருதானை புகையிரத நிலையத்தில் மாணவர்களின் நலன்கருதி 4 கொம்பாட்மென்கள் ஒதுக்கப்பட்டன. முக்கியமாக தடைமுகாம் பரிசோதனை, சிங்களப்பகுதிகளில் ஏனைய பிரயாணிகள் [சிங்களப் பிரயாணிகள்] மாணவர்கள் பயணம் செய்யும் பகுதிகளில் ஏறுவதால் ஏற்படும் முரண்பட்ட பிரச்னைகள் ஆகியவற்றிலிருந்து மாணவர்களை பாதுகாப்பதற்காகவே இவ்வாறு மாணவர்களுக்கென சில கொம்பாட்மென்கள் அரசாங்க அதிபரினால் புகையிரத அதிகாரியுடன் தொடர்பு கொண்டு ஒதுக்கப்பட்டன. இந்தநிலையிலேயே நாம் ஏனைய தமிழ் பயணிகளை எமது பகுதியில் வவனியா வரைக்கும் ஏறுவதற்கு மறுத்தோம் ஆயினும் எமது மக்கள்படும் கஷ்டத்தை கருத்தில் கொண்டு எமக்கு ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து புகையிரதம் புறப்பட்ட பின்னர் ஒரு கொம்பாட்மென்டை எமது தமிழ் பிரயாணிகளுக்காக விட்டுக் கொடுத்து அதிலிருந்த மாணவர்களை ஏனைய 3 கொம்பாட்மென்டிலும் நிற்குமபடி கூறினோம் இந் நடவடிக்கை மாணவர் பிரதிநிதியினால் மேற்கொள்ளப்பட்டது. அதில் பயணம் செய்த ஏனைய பயணிகளுக்கும் தெரிந்ததே.

மேலும் வவனியா புகையிரத நிலையத்தில் வைத்து எல்லா பயணிகளுக்கும் எமக்கு ஒதுக்கப்பட்ட பகுதிகளில் பயணம்செய்ய அனுமதி வழங்கியிருந்தோம். அந்த நிலையில் எமதுமாணவர்கள் ஏனைய பயணிகளுக்கு இருப்பதற்கு இடத்தைக் கொடுத்துவிட்டு தாங்கள் நின்றுவந்தார்கள் இவ்விடயமும் அதில் பயணம் செய்த ஏனைய பயணிகளுக்கும் தெரிந்ததே.

உண்மை இவ்வாறு இருக்க முன் வெளிவந்த ஆசிரியர் கடிதத்தில் மாணவர் விடுதியில் பங்களிப்பு பற்றி ஓர் முரணான கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது இதுகுறித்து மாணவர்கள் பெரிதும் கவலைகொண்டுள்ளனர். மேலும் அக்கடிதத்தை எழுதியவர் உண்மை நிலையை முழுமையாக தெரியாமல் புகையிரதத்தில் எங்கோ ஒரு மூலையில் இருந்துகொண்டு தனக்குத் தெரிந்த கருத்தை இவ்வாறு முரணாக கூறியுள்ளார்.

-- மாணவர் அவை
யாழ். பல்கலைக்கழகம்.

## பரமஹம்சரின் பெருமைகள்

(யாழ்ப்பாணம்)

"நமக்கு மேலே ஒரு பரம் பொருள் உண்டு. அப்பரப் பொருளை வெவ்வேறு பெயர் கொண்டு ஒவ்வொரு சமயத்தினரும் அழைக்கின்றனர். சிலர் சிவன் என்பர். சிலர் விஷ்ணு என்பர். சிலர்அல்லா என்பர். பெயர்கள் வெவ்வேறாக இருப்பினும் அப்பெயர்கள் சுட்டும் பொருள்ஒன்றே. எல்லாச் சமயங்களும் மக்களை ஈடேற்றுவதையே தம் இலட்சியமாகக் கொண்டுள்ளன. ஒருசமயம் உயர்ந்தது, இன்னொன்று தாழ்ந்தது என்று கூறுவது தவறு. சமயங்களுக்கிடையிலே போட்டி இருக்கக் கூடாது- சமய வெறி இருக்கக் கூடாது. இந்த உண்மையைப் பூரணமாக உணர்ந்திருந்தவர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரம ஹம்ஸர் அதனால் அவர் இந்துவாக இருந்து காளி தேவியை வழிபட்டார், சில காலம் இஸ்லாமியரைப் போல வாழ்ந்தார் சிலகாலம் கிறிஸ்தவராக வாழ்ந்து காட்டினர். ஏன் அப்படிச் செய்தார்? மதங்கள் எல்லாம் ஒன்று என்பதை நிரூபிப்பதற்காவே அப்படி வாழ்ந்தார்." இவ்வாறு யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்

[7-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்த அதிகாலை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மார்க்கோஸ்; நாட்டைவிட்டு வெளியேற எனக்குமனமில்லை. அதற்காக திருமதி அக்கினோவுடன்அதிகாரத்தைப்பகிர்ந்து கொள்ளவும் தயாராகவுள்ளேன்.

செனட்டர்: நான் றீகனுடன் இதுபற்றி கதைத்து விட்டு உங்களுக்கு மீண்டும் 'போன்' பண்ணுகிறேன்''

செனட்டர்: 'வெள்ளைமாளிகைக்குப்போய் ஜனாதிபதியுடன் கலந்தாலோசித்துவிட்டு மீண்டும் திரு. மார்க்கோசுக்கு 'போன்' பண்ணுகிருர்.

செனட்டர்: ''ஜனாதிபதி றீகன் நீங்கள் தொடர்ந்து பதவியிலிருப்பது கௌரக் குறைவு என்றுஎண்ணுகிருர்.''

மார்க்கோஸ்:' போல்நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நான் பதவி விலகவேண்டுமா?''

செனட்டர்: ''நீங்கள் பதவி விலகவேண்டிய நேரம் வந்துவிட்டது என்றே நான் நினைக்கிறேன்''

மார்க்கோ: நான் மிக மிக வெறுப்படைந்துவிட்டேன்!''

[குறிப்பு: மேற்படி தொலைபேசி சம்பாஷணைகடந்த செவ்வாய்க்கிழமை நடந்தது. இச் சம்பாஷணையை பி. பி. ஸி. ஒலிபரப்பியது.]

கொலை செய்யப்படுவது நிகழாது என்று இலங்கை அரசு உறுதியளிக்க வேண்டும்.

''பயங்கரவாதிகளை ஒடுக்குவதும், அப்பாவி மக்களைக் கொலைசெய்வதும் ஒன்ருக இருக்க முடியாது.

''இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது சம்பந்தமாக சபை உறுப்பினர்கள் வெளியிட்ட உணர்வுகளை நாம் முற்ருக ஏற்கின்ரேம். இவை முற்றிலும் உண்மைதான்.

''இலங்கை அரசு; சமாதானம்,அரசி ல் பேச்சுவார்த்தை அமைதித்தீர்வு குறித்து பேசிக்கொண்டு இராணுவத் தீர்வையே நாடுகிறது என்று உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

''போர்நிறுத்த ஒப்பந்தம் என்று குறிப்பிடப்பட்டது, ஆனுல் அது பெரும் பாலும் மீறப்பட்டே வந்துள்ளது பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகள் நாகரீக உயிர்களுக்கு அப்பாற்பட்டவையாகவே இருக்கின்றன. அறுவடைப்பணியில்ஈடுபட்டிருந்த அப்பாவி மக்கள்கூட கொலை செய்யப்பட்டுள்ளனர்'' என்று திரு பஹத் வருத்தம் தெரிவித்தார். [பி]

## பிலிப்பைன்ஸ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திருமதி அக்கினோவுக்கு ஆதரவு தெரிவித்து சர்வதேசநாடுகளிலிருந்து செய்திகள் கிடைத்தவண்ணம் உள்ளன.

பிலிப்பைன்ஸ்மக்கள் நேற்று முழுநாளும் வெற்றிக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர். நாடு வழமையான நிலைக்குத்திருப்பியது.

இதேவேளை அமெரிக்க அனுப்பிய விமானம் மூலமாக திரு. மார்க்கோஸும் அவரது குடும்பத்தினரும் நேற்றுபயணமாகி ஹவாய்த்தீவு போய்ச்சேர்ந்தனர். [பி]

## இனப்பிரச்னை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

ஒரு கடுமையான போக்கை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்என 'இந்து' பத்திரிகையில் திரு ஜி. கே. ரெட்டி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் வட, கிழக்குப் பகுதிகளில் நிகழ்ந்துவரும் சம்பவங்கள் பற்றி இந்திய அரசு கவலைதெரிவிக்கும் வேளையில் இவற்றினை மிக நெருங்கி ஆராய்ந்துவருவதாகவும் திரு ஜி. கே. ரெட்டி தமது செய்தி விமர்சனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## 18 ராணுவத்தினர் பலியானதாக

### விடுதலைப்புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் தமது இயக்கப் போராளிகளால் மேற்கொள்ளப்பட்ட 'சிலிண்டர்' கண்ணிவெடித்தாக்குதலில் இராணுவத்தினர் சென்ற இரு வாகனங்கள் முற்ருக சேதமடைந்ததாவும் பதினெட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் நேற்றுமாலை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் கோட்டை இராணுவ பொலிஸ் கூட்டு முகாமுக்கும், தள்ளாடி இராணுவ முகாமுக்குமிடையே நேற்று முன்தினம் காலை 6-30 மணிக்கு இத்தாக்குதல் தாம் நடத்தியதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## தி. மு. க...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தி .மு. க: 167
அ. இ. தி. மு க; 109
காங்கிரஸ் (இ]: 85
மார்க். கம்யூனிஸ்ட்: 19
இந்திய கம்யூனிஸ்ட்:17
ஜனதா: 14
பாரதிய ஜனதா: 02
சுயேச்சை: 164

380 ஊராட்சி ஒன்றியங்களுக்கான தேர்தலில் வெளிவந்த 375 முடிவுகளில் சில வருமாறு:

தி மு. க; 141
அ. இ. தி, மு. க: 117
காங்கிரஸ் (இ) 65

## இராணுவத்தின...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பின் கயிலாயநாதன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தில் அவரை இளைஞர்கள் கடத்திச் சென்று விட்டார்கள். மற்றவர் இராணுவத்தினரால் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ருர்.


## உருக்கமான வேண்டுகோள்!

எனக்குச் சொந்தமான 83 ஸ்ரீ/5376 இலக்கமுடைய நீலநிற சிடி 200 கொண்டா மோட்டார் சைக்கிளை 13-02-86 நள்ளிரவு 1-30 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயிலுக்கு அருகாமையிலுள்ள எனது இல்லத்திலிருந்து இனந்தெரியாத நபர்களால் திருப்பி ஒப்படைப்பதாக வாக்களித்து கடத்திச் சென்று, இதுவரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை.

இந்த சைக்கிள்மூலமே யான் கடமைபுரியும் மக்கள் ஸ்தாபனமாகிய வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் [நீர்வேலி] கொள்வனவு சம்பந்தமான கடமைகளைத் தாமதமின்றிச் செய்து அத்தியாவசியப் பொருள் வினியோகம் சீராக நடைபெற்று வந்துள்ளது. ஆனுல் தற்போது இக்கடமை வெகுவாகப் பாதிக்கப்பட்டு, கூட்டுறவாளர்களுக்கு துரித சேவையாற்ற முடியாதுள்ளதினுல், தயவு செய்து இம்மோட்டார் சைக்கிளைத் திருப்பி ஒப்படைத்து, எனது கடமையை துரிதமாகச்செய்து கூட்டுறவாளர்கள் பயன்பெறச் செய்யுமாறு பணிவாக வேண்டுகிறேன்.

இங்ஙனம்;
த. ஆனந்தவேல்,
வலி- கிழக்கு, தெ. ப. ப. நோ. கூ. சங்கம்,
[நீர்வேலி] பணியாளர்.

நீர்வேலி, 1986, 02 25. [C 971]

### இலங்கையின் முதல் ஓடியோ கிளப்

## இலவச அங்கத்துவம்

நியூவிக்ரேஸ் ஓடியோ கிளப் அங்கத்தவராவதற்கு அறிமுகம், வைப்புப்பணம் வேண்டியதில்லை இன்றே அங்கத்துவம் பெற்றுப் பின்வரும் பாடல்களை ஒறிஜினல் மக்சல் கசற்றில் கேட்டு மகிழுங்கள்.

★ பக்திப்பாடல்கள்,
★ புதிய பழைய சினிமாப்பாடல்கள்,
★ நாதஸ்வர, வாத்திய இசைகள்,
★ பிறந்தநாள், திருமணப் பாடல்கள்,
★ தத்துவ, சோகப் பாடல்கள்,
★ டிஸ்கோ, ஆங்கில, இந்திப்பாடல்கள்,
★ கதைவசனங்கள்.

வேண்டிய கசற்றை வேண்டிய நாட்களுக்கு கேட்டு ரசித்த பின் வாடகை ஒருகசற்றுக்கு ஒரு நாளுக்கு ரூபா 2/- மட்டுமே.

பாடல்கள் பதித்த ஒறிஜினல் மக்சல் கசற் விலை ரூபா 29-50

மேலதிக விபரங்களுக்கு நேரில்

## நியூ விக்ரேஸ் ஓடியோ கிளப்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 23532]

A 304

## நீதிமன்ற ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

1. கந்தையா சுந்தரமூர்த்தியும் பெண்
2. தனநாயகியும், காரைநகர் மேற்கு
— வழக்காளிகள்

1. பொன்னம்பலம் ஆனந்தநடராசாவும் பெண் புனிதவதியும், நீலிப்பந்தினி, காரைநகர்
— பதிலிடப்பட்ட வழக்காளிகள்

எதிராக

1. கணபதிப்பிள்ளை கந்தையா — இறந்துவிட்டார்
2. கந்தையா கைம்பெண் நேசரத்தினம், காரைநகர் வடக்கு. தனக்காகவும் இறந்த 1-ம் எதிராளியின் சொத்துப் பிரதிநிதியாகவும்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஈடு - 13499 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரத்தின்படி பின்னுல் விபரிக்கப்படும் காணியை 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் இருபதாம் திகதி வியாழக்கிழமை காலை பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை:

முதல் வட்டி ரூபா 23792/-ம் மார்கழி மாதம் 1972 தொடக்கம் 1-8-19ˇ4 வரைக்கும் ரூபா 15000/-க்கு 6% வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 1096/-.

### ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, யாழ்ப்பாணப் பட்டண இறை ''வரி மதிப்பீட்டிலக்கம் 8-ம், 10 ம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்'' நில பர. இலாச்சம் 3 குளி 5 வீடும் கிணறும் பயிர்வகைகளும் எல்லை கிழக்கு துரைசிங்கத்தின் ஆதனம் வடக்கு பிரதான வீதி, மேற்கு ஏ. அருளம்பலத்தின் உரிமைக்காரரின் ஆதனம் தெற்கு சி. தம்பிப்பிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனம்.

நீ. அன்ரனிப்பிள்ளை
விற்பனவுக் கொமிஷனர்

22, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [C 303]

## கடைசிநேர வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

Model N V 780 National 7 System 4 Head System விற்பனைக்குண்டு. தொடர்பு: P J C. குமார் டச் ரேட், உடுவில். (C 968

### வகுப்புகள்

ரேடியோ, ரீ. வி. (டெக் உட்பட), வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைன்டிங், Shorthand and Typing புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதம் வழங்கப்படும். Vispa Engineering, 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 974)

### லிடோ சினிமா

10-30, 2-30, 6-30
கல்யாணகுமார்- தேவிகா நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
புதிய பிரதி

### வெலிங்டன்

10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ் நடித்த
ஆனந்த ராகம்
(புதிய பிரதி கலர்)

## பெண்களுக்கான 9 மாத கால மனையியல் டிப்ளோமா வகுப்புக்கள்

ஆரம்பம் 3-3-86

CAKE ICING — COOKERY
HAIR STYLE — DRESS MAKING
KOLAM — FLOWER MAKING
HANDY CRAFT — GLASS & FABRIC PAINTNG

இத்துடன் இலவச ஆங்கில வகுப்புக்களும் நடைபெறும் ஞாயிற்றுக்கிழமை வகுப்புக்களும் 9-3-86 (ஞாயிறு) முதல் ஆரம்பமாகின்றன.

விபரங்கட்கு:

GS. LADIES' ACADEMY
(பதிவு செய்யப்பட்டது)
No. 57, Victoria Road, JAFFNA.
(சுபாஸ் ரூரிஸ்ட் ஹோட்டல் அருகாமை)
T'Phone: 22365 (C 970)

## எமது இன்றைய புதிய வெளியீடுகள்

கார்த்திக், பாணுப்பிரியா நடித்த
1. பாடும் பறவைகள் [தரமான பிரதிகள்]

'நிழல்கள்' ரவியின்
2. மறக்கமாட்டேன் [தரமான பிரதிகள்]

விஜயகாந்த், நளினி நடித்த
3. கருமேடு கருவாயன் [V .G. P.]

மற்றும் பல ஆங்கிலப் பிரதிகளும் வெளியாகியுள்ளன.

## வீடியோ பிரசாத்

இல. 232, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
A-300


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருநகர் சீநோர் ஸ்தாபனத்தை தொழிலாளர் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றனர்!

(யாழ்ப்பாணம்)

வட-இலங்கையின் பாரிய தொழிற்சாலைகளில் ஒன்றான குருநகர் சீ-நோர் ஸ்தாபனத்தை அங்கு கடமையாற்றும் தொழிலாளர் பொறுப்பேற்று நடாத்தி வருகின்றனர். இது பற்றி அவர்கள் தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் அறிவித்துள்ளனர்.

இந்த ஸ்தாபனம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குமானால் இழுத்து மூடப்படும். என்று உயரதிகாரிகள் அறிவித்ததைத் தொடர்ந்து தொழிலாளர்கள் கூடி, இது பற்றி ஆராய்ந்தனர்.

சீ-நோர் அபிவிருத்தி சபையும், சீ-நோர் தொழிற் சங்கத்தினரும் நடாத்திய கூட்டத்தில் பொதுமுகாமையாளர், பிரதி பொதுமுகாமையாளர் ஆகியோரை ஸ்தாபனத்திற்குள் அனுமதிப்பதில்லை என்று தீர்மானித்தனர்.

பொதுமுகாமையாளர் முன்னிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த முடிவு எடுக்கப்பட்ட மறுதினம், பிரதிபொது முகாமையாளர் அங்கு வந்ததாகவும் தொழிலாளர்கள் வாசலில் மறியல் செய்யவே அவர் திரும்பிச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிறுவனத்தின் பொது முகாமையாளர் பிரதிப்பொது முகாமையாளர் ஆகிய இருவரையும் தொழிற்சாலைக்குள் வருவதற்குச் சகல தொழிலாளர்களும் தடைசெய்துள்ளனர்.

இவ்விருவரும் தற்சமயம் தொழிற்சாலைக்கு செல்வதில்லை ஆயினும் தொழிற்சாலை தொடர்ந்து இயங்கி வருகிறது.

தொழிற்சாலை நஷ்டத்தில் இயங்கியதற்கான காரணங்களைத் தெரிவித்து, தொழிலாளர் கூட்டங்கள் நடாத்தியும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டதுடன் தகுதி வாய்ந்த அதிகாரிக்கும், உள்ளூர் சமூக முன்னேற்றச் சங்கங்களுக்கும் தெரியப்படுத்தியும் கூட மாற்றம் ஏற்படவில்லையாம்.

இதனால் தொழிலாளர்கள் கூடி ஏகோபித்த முடிவை எடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இம் முடிவுகளுக்கமையவே பொது முகாமையாளரையும், பிரதிப் பொதுமுகாமையாளரையும் இவ்ஸ்தாபனத்துக்குள் வரவிடாதபடி தொழிலாளர்களும் ஏனைய ஊழியர்களும் வேலைகளைச் செய்து வருகின்றனராம். (ஐ)

## அகதியின் பரிதாபமரணம்

[யாழ்ப்பாணம்]

கலவரத்தில் உயிர்தப்பி குடும்பத்துடன் பாதுகாப்பு தேடி வடபகுதிக்கு வந்தஅகதி ஒருவர் ஏற்புக்குட் பலியானார்.

இரணைமடு அகதி முகாமை சேர்ந்த மாரிமுத்து மூக்கன் [51 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவர்.

யாழ்.மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவர் கிளிநொச்சிக்குச் சைக்கிலில் வந்தபோது காலில் காயம் ஏற்பட்டதாகவும் தனிப்பட்ட டாக்டரிடம் சிகிச்சை பெற்ற பின் வாய் திறக்கமுடியாமல் போனதால், கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின் யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானார் விசாரணையின் பின் ஏற்பு மரணம் எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [க]

## நிபந்தனை விற்பனை ஒருகுற்றம்

(யாழ்ப்பாணம்)

''பல்துலக்கி எடுத்தால் மட்டுமே பற்பசை தரப்படும் என்றால் அது நிபந்தனை விற்பனையாவதுடன் குற்றமுமாகும்'' என்று யாழ் செயலக உள் நாட்டு வியாபார ஆணையாளர் எச்சரித்துள்ளார்.

எல்லாவிதமான விற்பனை அடையாளம் கொண்ட பற்பசைகளைப் பொறுத்த வரை பாவனையாளர்கள் தாம் விரும்பியபடி பெற்றுக் கொள்ளலாம் என்றும், வியாபாரிகள் விற்பனையில் நிபந்தனை விதித்தால் தமக்கு அறிவிக்கும்படியும் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (மா)

## ஒடியல் 'சூப்' சுவைத்தீர்களா?

[வண்ணார்பண்ணை]

யாழ்.பரியோவான் கல்லூரியில் நடைபெற்றுவரும் இயற்கை மூலவள உற்பத்தி அபிவிருத்திக் கண்காட்சியில் புதிய நவீன முறையிலான உணவுத் தயாரிப்புக்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

பனை அபிவிருத்திச் சபையினால் இக்கண்காட்சியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள காட்சியறையில் பனை உணவுவகைகள் பல அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

எந்த நேரமும் உடனடியாக சுடு நீரில் கரைத்துப் பருகத்தக்க ஒடியல் கூழ் பக்கட்டுக்கள் புதியதயாரிப்புக்களில் ஒன்றாக காட்சிகொடுத்திருந்தது.

பதனிடப்பட்டஒடியல் மாவுடன் பதனிடப்பட்ட மரக்கறி வகைகளும் கலக்கப்பட்டு இந்த றெடிமெட் கூழ்தயாரிக்கப்பட்டிருந்தது.

சத்துணவுத் திட்டத்திற்கு பயன்படுத்தத்தக்க வகையில் பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்திபிரிவு இதைஅறிமுகப்படுத்தியுள்ளது.

இலங்கையில் உள்ள ஹோட்டல்கள் பலவற்றில் ''ஒடியல் சூப்'' என்று இக்கூழ் ஏற்கனவே பரிமாறப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## 3 - வது நபர் அடையாளம் காணப்பட்டார்

[வவனியா]

பூவரசன்குளம் சந்தியில் வாகனங்களில் வந்த சீருடையினர் கண்டபடி சுட்டதில் பலியான மூவரில் அடையாளம் காணப்படாதிருந்த மூன்றுவது நபர் செட்டிகுளம் வாசி என்று இப்போது தெரிய வருகின்றது.

இவரது பெயர் அந்தோணி என்றும் கூலிவேலை செய்பவர் என்றும் தெரிய வந்துள்ளது.

சப்பந்தப்பட்ட உறவினர்கள் வவனியா ஆஸ்பத்திரிக்கு வந்து இவரைப்பற்றி விசாரித்த போது விடயம் தெரிய வந்துள்ளது. இவரது சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது தெரிந்ததே.

# அரசியல் தீர்வு காணக் கோரி இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

## 16 அமைப்புக்கள் பங்கு பற்றும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ அடிப்படையில் அரசியல் தீர்வு காணும்படியும், தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து சகல இராணுவ முகாம்களையும் மூடி ஆயுதப் படையினரைத் திருப்பியழைக்குமாறு கோரியும் இன்று. யாழ் நகரில் 16 அமைப்புக்களின் கண்டனப் பேரணியும், ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடைபெற இருக்கிறது.

இந்த ஊர்வலத்தில் ஆயுதப் படையினர் தமிழ்ப்பேசும் மக்கள்மீது நடத்திய தாக்குதல்கள் கொடுமைகளை விளக்கும் 10 ஊர்திகள் இடம்பெறும் என்று அண்ணா தி.மு.க செயலாளர் பொன் மதிமுகராசா தெரிவித்தார்.

தங்கவேலாயுதபுரத்தில் 101 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும் ஊர்தியில் இடம் பெறும் என்றும் மினிட்ராக்டர்களும் மாட்டு வண்டில்களும் இவ்வூர்வலத்தில் இடம்பெறும் என்றும் தெரிவித்தார்.

இந்த ஊர்வலத்தில் பங்கு பற்றுவது பற்றியும் சட்டத்தரணிகள் சங்கம் இதுவரை முடிவெடுக்காத போதிலும் பலசட்டத்தரணிகள் இந்த ஊர்வலத்தில் பங்குபற்றமுன் வந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

அரசாங்க தனியார் பஸ் ஊழியர்களும் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் பூரண ஆதரவு வழங்கியிருப்பதாகவும் அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் இன்று கறுப்புப் பட்டி அணிந்து கல்லூரிக்குச் செல்வார்கள் என்றும் மாணவர்கள் காலை 10 மணிக்கு வகுப்புக்களைப் பகிஷ்கரித்து விட்டு ஊர்வலத்தில் பங்குபற்றுவார்கள் என்றும் ஊர்வலத்தில் பங்குபற்றுமாறு தாங்கள் விடுத்த கோரிக்கையை மாணவர்கள் ஏற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தஊர்வலத்தில் அண்ணா தி.மு.க, யாழ் வர்த்தகர் சங்கம், தெங்கு பனம்பொருள் உற்பத்தியாளர் சங்கம், [illegible] தொழிலாளர் சங்கம், இசைவேளாளர் சங்கம், குருநகர் ஐக்கிய சனசமூக நிலையங்களின் சமாசம், கடல் தொழிலாளர் சங்கம், சிப்பந்திகள் ஊழியர் சங்கம், சுருட்டுத்தொழிலாளர் சங்கம், தேவர்குலம் நலன்புரிச்சங்கம், தேசிய சுகாதார தொழிலாளர் சங்கம், மினிபஸ் உரிமையாளர் சங்கம், 25 மனை செட்டிமார் மகாஜன சங்கம், சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், மாணவ மாணவியர் மன்றங்கள் கலந்துகொள்ளவிருக்கின்றன,

ஆர்ப்பாட்ட ஊர்வலம் இன்று காலை 9-30 மணிக்கு யாழ் சிவன்கோவிலடியிலிருந்து புறப்பட்டு யாழ் நகர் வீதிவழியாக கச்சேரியை அடைந்து அங்கிருந்து கச்சேரி நல்லூர் வீதிவழியாக நல்லூர்க் கந்தசவாமி கோவிலுக்குச்சென்று இன்று பிற்பகல் அங்கு பொதுக்கூட்டம் நடைபெறும். [க]

## தொழில்தேடி வெளிநாடு செல்வோர்: விமானநிலையத்தில் விசேட பிரிவு

[கொழும்பு]

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுச்செல்பவர்களின் பெயர் விடரங்களைப் பதியும்பொருட்டு சட்டு நாயக்கா விமான நிலையத்தில் விசேட பிரிவுஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பிரிவில் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் அனைவரும் கட்டாயம் பதிந்துகொள்ள வேண்டுமென தொழிலமைச்சு கேட்டுள்ளது. [ய-செ]

## பருத்தித்துறை நிலைமை

(புலோலி)

பருத்தித்துறை மக்கள்வங்கி திறக்கப்பட்டு நாள்தோறும் ஒரு மணிநேரம் வாடிக்கையாளர்களின் காசோலை வைப்பிலிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

கடந்தவியாழக்கிழமைமுதல் இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மக்கள் வங்கியின் வடபிராந்திய உதவி முகாமையாளர் திரு சிதம்பரநடராசா தெரிவித்தார்.

காசோலை வைப்பிலிடுவது தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகள் நெல்லியடி மக்கள் வங்கிக் கட்டிடத்திலேயே நடைபெற்றுவருகின்றன. பருத்தித்துறை மக்கள் வங்கியில் இரண்டு ஊழியர்கள் கடமையாற்றிவருகின்றனர். பருத்தித்துறை, புலோலி ப. நோ. கூ. சங்கங்கள் உட்பட பல மக்கள்வங்கி வாடிக்கையாளர்கள் காசோலைகளை வைப்பிலிட்டு வருகின்றனர்.

பருத்தித்துறை இலங்கை வங்கியின் முன்பாக நேற்று பெருந்திரளான வாடிக்கையாளர்கள் வங்கி திறக்கப்படுமென எதிர்பார்த்தனர் வங்கி மறு அறிவித்தல்வரை திறக்கப்படமாட்டாது என்ற அறிவித்தல் தொங்கவிடப்பட்டதைத் தொடர்ந்து வாடிக்கையாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

பருத்தித்துறை நகரசபைக் காரியாலயத்தின் செயற்பாடுகளும் ஸ்தம்பித்துள்ளமையினால் சுத்திகரிப்பு சேவைகள் உட்பட பலசேவைகள் நடைபெறவில்லை.

பருத்தித்துறை நகரில்சந்தைகள் சந்தைக்கட்டிடங்களில் கூடவில்லை. பஸ்சேவைகள் யாவும் மருதடியிலிருந்தே ஆரம்பிக்கின்றன. வழமையைவிட நேற்றுச் செவ்வாய்க் கிழமை பருத்தித்துறை நகரில் சன நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

## இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 15 (1896-2.27)
கிழமை- வியாழன்
திதி- திருதியை பி. பகல் வரை
நட்சத்திரம்- அத்தம் மு. இ வரை

மேடம்: இன்று எவ்விடத்திலும் அவதானம் வேண்டும். ஏமாற்றத்திற்கும் இடமுண்டு. நண்பராலும் நஷ்டத்திற்கிடமேற்படும்.

இடபம்; பிதா வழிமூலம் பெருமைக்கிடமுண்டு. குருவின் ஆசியும் உண்டு. தெய்வ வழிபாடு சிறப்பைத் தரும்.

மிதுனம்; தொழிற்றுறையில் தொல்லைகள் நீங்கும். நீண்ட நாள் பிணி நிவர்த்தியாவதற்கு இடமுண்டு. ஆலோசித்து செயல்படவும்.

கடகம்: நல்ல காரியங்கள் ஆரம்பிப்பதற்கு இன்று சுப தினம். வெளியூர்ப் புதினமும் உண்டு பெரியோர் உதவியும் கிடைக்கும்.

சிங்கம்: வாய்வுக்கோளாறினால் அவஸ்த்தைப்பட நேரும், உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும். தூர பயணத்தைத் தவிர்க்கவும்.

கன்னி; மனதில் விரக்தி தோன்றும். மனையில் சிறுபூசலுக்கிடமுண்டு இன்று மனத் திடம் வேண்டும்.

துலாம்: எதிர்பார்த்த வேதனம் தடைப்படும். நீண்ட நாள் நண்பரொருவரை மீண்டும் சந்திக்க நேரும். வரவுமுண்டு.

விருச்சிகம்: சரீரசுகக்குறைவும் சயனபோசனக் குறைவும் உண்டு. சகோதரவழியாலும் சுகமுண்டு.

தனுசு; வாகனச் சொந்தக்காரர்களுக்கு சிறப்பான தினம் மாணவர்களாயின் கல்வியில் முன்னேற்றமுண்டு. பொதுத் துறையில் நாட்டமுண்டு

மகரம்: குடும்பவிவகாரங்களில் பிணக்குக்கள் இறுகும். செலவீனங்கள் கட்டுப்படியாகவே இருக்கும். புத்திர வழிச் சுகமும் உண்டு.

கும்பம்: மறைமுகத்தாக்குதல்களுக்கிடமுண்டு, போக்குவரத்தில் அவதானம் வேண்டும். இன்று இராப்பயணத்தைத் தவிர்க்கவும்

மீனம்: நல்லதைச் செய்வீர்கள். பிரமுகர்கள் உங்களைத்தேடிவருவார்கள். சமூகத்தில் மதிப்புயரும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## மின்தடை

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைப் பகுதி இரண்டு நாட்களாக இருளில் மூழ்கியுள்ளது.

காங்கேசன்துறை மாவிட்டபுரம் பகுதிகளில் கடந்த இரு நாட்களாக மின்சாரத்தடை ஏற்பட்டுள்ளதால் இப்பகுதி இருளில் மூழ்கியள்ளது. அதே நேரத்தில் மின்சாரசபை மின்சாரம் வழங்க துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர் வெற்றிக்கிண்ணப் போட்டி

# அடுத்த மாதம் 1-ம் திகதி திருநெல்வேலியில் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ் உதைபந்தாட்ட லீக், இவ் வருடத்துக்கான தனது முதலாவது உதைபந்தாட்டப் போட்டியை, விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்த விருக்கிறது.

தலைவர் வெற்றிச் கிண்ணத்துக்காக ''9 — பேர்'' பங்கு பற்றும் இப்போட்டி 'நொக்கவுட்' முறையில் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் 19-ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மொத்தம் பத்து விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன '9 வீரர்கள்'' பங்குபற்றும் இப்போட்டி 11 வீரர்கள் பங்குபற்றி விளையாடும் போது கடைப்பிடிக்கப்படும் சட்டதிட்டங்களே, மேற்படிப் போட்டியிலும் கடைப்பிடிக்கப்படும் என யாழ். உதைபந்தாட்ட லீக்கின் புதிய போட்டிக்குழுக் காரியதரிசி திரு. எம். தேவதாஸ் தெரிவித்தார்.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளும், முன்கூட்டியே செய்து முடிந்து விட்டதாகவும் இம்முறை இந்தப் போட்டிகள் யாவும் திருநெல்வேலி குமரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் எனவும் தெரியவருகிறது. [வி]

# மூளைக்காய்ச்சலை முறியடிக்கும் முயற்சிகள் தீவிரம்!

[கொழும்பு]

இலங்கையின் பல பகுதிகளில் மூளைக்காய்ச்சல் என்ற பயங்கர வியாதி பரவுகின்ற அபாயம் பற்றி உலக சுகாதார ஸ்தாபனம் விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து, இந்த நோய் பரவுவதைத் தடுப்பதற்கும் இதற்கான மூல காரணங்களை ஆய்ந்தறியவும் அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்த நோயால் பீடிக்கப்பட்ட 400 பேர் ஏற்கனவே இறந்தது தெரிந்ததே.

சுகாதார அமைச்சு தரும் தகவல்களின் பிரகாரம் அனுராதபுர மாவட்டத்தில் ஒரு வாரத்தில் இருவர் மூளைக் காய்ச்சல் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுகிறார்கள் எனவும் தெரிய வருகின்றது,

## உழுந்து விலை அதிகரிக்கும்

[வவனியா]

வவனியாவில் உளுந்தின் கொள்முதல் விலை அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து சந்தைப்படுத்தும் வர்த்தக பிரதிநிதிகள் நேரடியாக வவனியா வந்து உழுந்தைக் கொள்முதல் செய்யலாம் என்று அறியப்படுகிறது.

இந்த வர்த்தகப் பிரதிநிதிகள் வெளிநாட்டிற்கு உழுந்தை ஏற்றுமதி செய்பவர்கள். வவனியாப்பகுதி உழுந்திற்கு பெயர் போன இடம் என்பது குறிப்பிடத்தக்கது.

## "இன்றைய நிலையில்

# ஆரம்ப சுகாதாரம்

## அவசியம் பயில வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

''இன்றைய காலகட்டத்தில் ஆரம்ப சுகாதாரம் பற்றித் தெரிந்திருத்தல் மிகவும் அவசியமாகும். முக்கியமாக விவசாயம் கற்கும் மாணவர்கள் ஆரம்ப சுகாதாரம் நன்கு படித்திருக்க வேண்டும்.''

இவ்வாறு, மருதனுமடம் இணுவில் விவசாயப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற 'ஆரம்ப சுகாதார கவனிப்பு' என்ற கருத்தரங்கில் பேசும்போது உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கில் பல பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 200க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

வைத்திய கலாநிதி தெய்வேந்திரன், சுகாதாரப் போதனாசிரியர் வைத்தீஸ்வரன், திரு. தங்கவேலாயுதம், திருமதி அல்பிறட், திருமதி துரைசிங்கம், திருமதி செபஸ்தியாம்பிள்ளை திருமதி பொன்னம்பலம் ஆகியோரும் கருத்தரங்கில் பேசினார்கள்.

புற்று நோய் வைத்திய விடுதிக்கு மாணவர்களால் சேகரிக்கப்பட்ட 250 ரூபா பண முடிச்சை மன்றத்தலைவர் திரு. கேதீஸ்வரன், சுகாதாரப் பரிசோதகர் திரு தங்கவேலாயுதத்திடம் கையளித்தார்.

## கிழக்கு மாகாணப் படுகொலைகள்:

# 2-ம் திகதிகண்டன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

உடும்பன்குளம் தங்கவேலாயுதம் ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் 103 பேர்களை அரச கொமாண்டோக்கள் சுட்டும், உயிருடன் எரித்தும் படுகொலை செய்தமையைக் கண்டித்து மார்ச் மாதம் 2-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாபெரும் ஊர்வலம் ஒன்றினை நடாத்த முடிவு செய்துள்ளதாக கிராமிய தொழிலாளர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் உடும்பன்குளம் தங்கவேலாயும் ஆகிய இடங்களில் தமது அன்றாட விவசாய வேலைகளில் ஈடுபட்டிருந்த பெண்கள் ஆண்கள் என்ற பேதமின்றி சிறுவர், வயோதிபர் என்ற பாகுபாடின்றி அங்கு காணப்பட்ட சகல விவசாயமக்களையும் அரசாங்கத்தின் கொமாண்டோ படையினர் சுட்டுக்கொன்றதுடன் வைக்கோல்போரினுள் தீமூட்டிப் படுகொலை செய்துமுள்ளனர். இச்சம்பவங்கள் இந்நாட்டில் தமிழ் மக்கள் தமது மண்ணில் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாத நிலையைத் தெளிவாகக் காட்டுகின்றது. காலத்திற்குக் காலம் இப்படிப் பல கொடுமைகள் தமிழ்த் தொழிலாளர்களுக்கு நடந்துள்ளது ஆகவே இத்தகைய அநியாயங்களையும், அக்கிரமங்களையும் கிராமியத் தொழிலாளர்களாகிய நாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

எனவே இந் நிகழ்ச்சியை கண்டித்து இது போன்ற தொழிலாளர் கொலைகளைக் கண்டித்து நாம் ஊர்வலத்தை நடாத்தத் தீர்மானித்துள்ளோம் என அவ்வறிக்கை கூறுகின்றது. (ஐ)

## சேதம்பற்றி பிரஜைகள் குழுவிடம் முறைப்பாடு

[வல்வெட்டித்துறை]

தொண்டைமானாறு இராணுவ முகாமிலிருந்து, பொது மக்கள் வாழும் இடத்தை நோக்கி மோட்டோர் ஷெல்களாலும் பீரங்கிகளாலும் தாக்குதல் மேற்கொண்டதால் சுமார் ஐந்துலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட புதிய வீடொன்றும் பலத்த சேதத்திற்குள்ளானது.

இளைப்பாறிய அரச உத்தியோகத்தரான பொ. சுந்தரலிங்கம் என்பவரின் வீடே இத்தாக்குதலுக்கிலக்கானது.

இவர் தமக்கேற்பட்டுள்ள சேதவிபரம் வல்வை பிரஜைகள் குழுவிற்கும் யாழ். அரச அதிபருக்கும் முறையிட்டுள்ளார்.

முகாமிலிருந்து சுமார் நூறு யார் தூரத்திலிருக்கும் தமது வீடு 85 டிசம்பர் 18ம் திகதியும் 86 ஜனவரி 18ம் திகதியும் குண்டுத் தாக்குதலால் சேதப்படுத்தப்பட்டதுடன் விலை உயர்ந்த பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டதாகவும் மரத்தளபாடங்கள் தீவைத்து கொளுத்தப் பட்டதாகவும் புகாரில் தெரிவிக்கப் பட்டுள்ளது மனைவியும் தமது 5பெண் பிள்ளைகளும் ஒரு ஆண்பிள்ளையுமாக இப்பொழுது அயற்கிராமத்தில் வாடகை வீட்டில் வசித்து வருவதாகவும் வாழ்க்கைச் செலவிற்கே தாம் கஷ்டப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். [மா]

## வில்லிசைத் தென்றல் ஓய்ந்தது

ஈழத்தின் புகழ்பெற்ற வில்லிசைக் கலைஞர்களுள் ஒருவரான திரு. சபா. சதாசிவம் (அம்பிகை வில்லுப் பாட்டுக் குழு) 56வதுவயதில் 12-2-1986 அன்று அமரருலகு எய்திவிட்டார். ஒரு மூத்த கலைஞனாக, வழிகாட்டியாக இத்தனை காலமும் இருந்த அன்னாரின் இழப்பு கலைஞர்களுக்கெல்லாம் ஒரு பேரிழப்பாகும்.

திரு சபா சதாசிவம் வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தமது இளம் பிராயந் தொட்டே வில்லிசையில் ஆராக் காதல் கொண்டு இந்தியா சென்று மதுரை ஆதீன ஆஸ்தான வித்துவானாய் இருந்த வில்லிசை மன்னர் திரு. சபா பிச்சைக் குட்டியிடம் வில்லிசையை ஐயந்திரிபறக்கற்றூர் 1969ம் ஆண்டு மதுரை ஆதீன மண்டபத்தில் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் அரங்கேறினர். கரகோஷம் வானைப்பிளந்தது. அதன் மூலம் யாழ்ப்பாணமண்ணுக்கு ஓர் தனிப்பெருமையை அந்தச் சபையில் ஏற்படுத்தினர்.

அவரது கதைசொல்லும் பாங்கு சிந்தை கவரும் மெட்டமைப்புகள், சபையோரை அனுசரித்துப் போகும் பண்பு முதலானவை ரசிகர் மத்தியில் அவருக்கொரு தனியிடத்தைப் பெற்றுக்கொடுத்தன நகைச்சுவைக்காகத் தாம் கூற வந்த கதையை விட்டுவிலகி விடும் போக்கைவிட்டு, அந்தக் கதையைச் சிறப்பிக்கும் வகையிலே நகைச்சுவைகளை சிதற விடுதல் அவருடைய திறமைக்கு ஒரு சான்றாகும்.

திரு. சபா சதாசிவம் ஓர் உணவு உற்பத்தி ஓவசியராகப் பணியாற்றியவர் சமீபத்தில் கல்வியங்காடு கட்டப்பிராயில் அவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தினுல் அன்னரது அருமை மகன்களில் ஒருவரான செல்வன் மணிமாறன் கொலையுண்டது யாவருக்கும் தெரிந்ததே. அடிக்கு மேல் அடியென்பது போல மேலும் இன்னெரு சோகத்தால் பரிதவிக்கும் அன்னரது குடும்பத்துக்கு ஆறுதலை நல்குமாறு இறைவனைத் துதிக்கிறேம். அன்னரது ஆத்மா சாந்தியடைவதாக.

ரசிகர்கள்

## டெஸ்ட் கிரிக்கெட்:

# இலங்கை 31--2

[கண்டி]

இலங்கை - பாகிஸ்தான் கோஷ்டிகளிடையே கண்டியில் நடைபெறும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றும் நாள் மழைகாரணமாக கூடுதலான நேரம் தடைப்பட்டது.

மதியபோசன இடைவேளையின் பின்பே ஆட்டம் ஆரம்பமானது. காலநிலை சீரில்லாததால் ஆட்டம் மீண்டும் 1-55-க்கு ஒத்திவைக்கப் பட்டது அப்போது இலங்கைக் கோஷ்டி 2-வது இன்னிங்ஸில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 31 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்தது. ஆரம்ப வெற்றிமுனியும், றவிரட்னுயக்காவும் முறையே 8, 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அரவந்த டிசில்வாவும், றெய் டயஸும் 5, 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருக்கின்றனர்.

பாகிஸ்தான் காப்டன் இம்ரான்கானும், அக்றமும் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்கள்.

நேற்று ஓய்வு நாள். 4-ம் நாள் ஆட்டம் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

ஸ்கோர் விபரம்: இலங்கை: 109, 31—2. பாகிஸ்தான்: 230. (வி)

## 'ருகிங்'...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

எமது பணிகளை மேற்கொண்டிருக்கிறேம்.

எந்த ஒரு மனித உரிமை மீறலுக்கு எதிராகவும் குரல் கொடுத்தும், தமிழ்பேசும் மக்களுக்கு எதிரான அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக மக்களுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுத்திருக்கின்றேம் இவற்றின் மூலம் மக்கள் எம்மேல் வைத்திருக்கின்ற நல்லெண்ணத்தை கெடுப்பதன் மூலம் எமது நியாயமான கருத்துக்களை வலுவிழக்கச் செய்யும் நோக்கம் இவர்களுக்கு இருக்குமானல் மக்கள் இவர்களை நிச்சயம் தோல்வியடைய செய்வார்கள் என்று முழுமையாக நம்புகிறேம்.''

(மா)

## சென் ஜோன்ஸ் புதிய அதிபருக்கு பாராட்டு

[யாழ்ப்பாணம்]

''நெருக்கடியான வேளையில் அதற்கேற்ப தலைமைத்துவம் வந்தேதீரும். எனவே இன்று தன்னுடைய அதிபர் அமரர் ஆனந்தராசாவை இழந்திருக்கும் எங்கள் சென் ஜோன்ஸ் கல்லூரிதனது இடைவெளியை நீக்கவல்ல புதிய அதிபரைப் பெற்றுள்ளது.''

இவ்வாறு சென் ஜோன்ஸ் கல்லூரியின் புதிய அதிபராக பதவியேற்ற திரு ரி. குணசீலனை கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் எஸ் எம். வி. திசாநாயகம் கூறினர்.

அதைத்தொடர்ந்து சென் பற்றிக் கல்லூரி அதிபர் வண. பிரான்சிஸ் யோசப் அவர்களும், பெற்றேர் சார்பில் டாக்டர் சி. பிலிப்பும் கல்லூரி பழையமாணவர் சார்பில் திரு. கே. எஸ். நல்லையாவும் பாராட்டுரை வழங்கினர்கள்.

கல்லூரி புதியஅதிபர் தமது நன்றி உரையில், இவ்வைபவத்தில் வழங்கப்பட்டபாராட்டு தம்மை மிகவும் உற்சாகப்படுத்தியதாகவும், தமது தந்தையாரும் இங்கேயே படித்து இங்கேயே ஆசிரியராக இருந்ததாகவும், அதேபோல் மாணவனக ஆசிரியராக, உப அதிபராக இருந்தமையினுல் எந்த சவாலையும் தம்மால் எதிர்நோக்க முடியும் என்ற நம்பிக்கை உண்டென்றும் கூறியதோடு அனைவருக்கும் நன்றி கூறினர்.

## வலைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே வருடாந்தம் நடாத்தப்படும் வலைபந்தாட்டப் போட்டி அடுத்த மாதம்ஆரம்பமாக இருக்கிறது.

மேற்படி போட்டியில் மொத்தம் 11 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. ''நொக்கவுட்'' முறையில் நடாத்தப்படும் இப்போட்டி அடுத்தமாதம் 8ம், 9ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட வலைபந்தாட்டச் சங்கத்தலைவி செல்வி கே. வைத்திலிங்கமும், சோபாய் பிரிவு விளையாட்டு அதிகாரி திருமதி ஏ. எவ். ஜேரூ சிங்காவும், மேற்படிபோட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். (வி)

## பரமஹம்சரின்..-

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் நடைபெற்ற பகவான் ஸ்ரீ. இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஜயந்தி விழாவிலே சிறப்புச் சொற்பொழிவாற்றிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் குறிப்பிட்டார்.

வித்தியாலய இந்து மாணவர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த இவ்விழா அதிபர் திரு, சி சிவசரவணபவன் தலைமையில் நடைபெற்றது மாணவர்களின் சார்பில் செல்வன் அ. ஜேர்ஜ், செல்வன் சி. மகாதேவன், செல்வி ச செல்வமகள், ஆகியோர் பேசினர். மாணவர்களின் பஜனை பண்ணிசை, நடனம் முதலிய நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன. இந்து மாணவர் மன்றப் பெருந்தலைவர் திரு. சந்தேசம் வரவேற்புரையும் செயலாளர் செல்வன் செ. ஜீவதாசன் நன்றியுரையும் வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# விசித்திரமான ‘மரணதண்டனை’

(கிளிநொச்சி)

போராளிகளைக் காட்டிக் கொடுத்ததாகக் குற்றஞ் சாட்டி, இளைஞர் ஒருவருக்கு விசித்திரமான முறையில் மரணதண்டனை விதிக்கப்பட்டது. இச்சம்பவம் நேற்று முன்தினம் பரந்தனில் இடம் பெற்றது.

திருநகரைச் சேர்ந்தவரும் குண்டப்பாவின் மகனுமான ‘பாம்பு’ எனபவருக்கே மின்கம்பமரணதண்டனை விதிக்கப்பட்டது.

பரந்தன் சந்தியிலுள்ள மின்கம்பமொன்றில் கட்டப்பட்ட இந்த இளைஞனின் வயிற்றில் வெடிகுண்டு ஒன்றும் வைக்கப்பட்டதாம்.

இந்த வெடிகுண்டு வெடித்த போது இவரின் உடல்வேறு தலைவேறுக பிரிந்ததுடன்உடல் சிதறப்பட்ட நிலையில் காணப்பட்டது. போராளிகளைக் காவடிக்கொடுத்ததற்காகவே இட்ருக்கு இத்தண்டனை வழங்கப்பட்டதாம்.

# “ராணுவத்தை உடன் வாபஸ்பெற்று இனப் படுகொலையை நிறுத்துக!”

## ஜனதிபதிக்கு பிரஜைகள்குழு இணைப்புக்குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

“தமிழ் பகுதியிலிருந்து இராணுவ நிறுவனங்கள் யாவும் எல்வித ஐயத்திற்கும் இடமில்லாதவகையில் உடனடியாக நீக்கப்படவேண்டும் என்று கோருகிறேம்”

பத்தி லட்சம் கையெழுத்துடன் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பப்படவிருக்கும் தீர்மானத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் இந்து விடுதியில், நேற்றுப் பிற்பகல் பேராசிரியர் கே. சிவத்தம்பி தலைமையில் நடந்தபிரஜைகள்குழு இணைப்புக்குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

**தீர்மானத்தின்** பிரதிகள் யார் யாருககு அனுப்பவேண்டுமோ அவர்களுக்கெல்லாம் அனுப்பி வைக்கபடும் என்று பேராசிரியர் சிவத்தம்பி தெரிவித்தார்.

கையெழுத்தியக்கம் மார்ச் மாதம் 15ம் தேதிவரை நீடிக்சப்பட்டிருப் தாகவும், 16ம் திகதி காலை நடைபெறும் கூட்டத்தில் கையெழுத்து பட்டியல்களை ஒப்படைக்க வேண்டும் என்றும் யாழ்ப்பாணத்தில் இதுவரை ஒன்றரை லட்சம் மக்கள் கையெழுத்திட்டுள்ளதாகவும், கிழக்கு மாகாணத்திலும்கையெழுத்து பெறப்பட்டு வருவதாகவும் அவர் கூறினர்.

ஜனதிபதிக்கு அனுப்பப்படவிருக்கும் தீர்மானத்தின் முழு விபரம் வருமாறு:

### தீர்மானத்தின் முழுவிபரம்

“கையெழுத்து இயக்கம் ஆரம்பிக்கப்பெற்ற பொழுது நிலவிய சூழல் இப்பொழுது முற்றிலும் மாறுதலடைந்து, இராணுவத் தாக்குதல்களின் அளவும், முறையும், கொடூரமும் அதிகரிக்கப்பட்டிருப்பதால் வடக்கு, கிழக்கு, மலையகப்பகுதிகளில்வாழும்தமிழர்களாகிய நாம், இன்றைய நிலையில் முன்வைப்பது இந்த இனக்கொலை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்னும் கோரிக்கையே.

தரைத்தாக்குதல்காளகவும், கடலிலிருந்து விடப்படும் ‘ஷெல் களாகவும் தொடங்கிய இராணுவத் தாக்குதல்கள் ஹெலிகொப்டரிலிருந்து வெளிவரும் துப்பாக்கிச் சூடாக இன்று அந்நியநாட்டவர் மீது ஏவப்படும் தாக்குதல்போன்று ஆகாய விமானத்தில் குண்டு மாரித்தாக்குதலாக மாறியுள்ளமை இப்பகுதிகளின் மனித வாழ்க்கையையே பூண்டோடு அளிக்கும் ஒரு முயற்சியாக உள்ளது. இந்த இன அழிப்பு முயற்சிகள் நிறுத்தப்படுமென்பதற்கு அரசு தரக்கூடிய ஒரேயொரு உத்தரவாதம்; தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள இராணுவ நிறுவனங்கள சகலவற்றையும் உடன் நீக்குவதே. அன்றிருந்த நிலையில், முதலில் சன நெருக்கடியான இடங்களிலிருந்து பின்னர் மற்றைய இடங்களில் இருந்தும் நீக்கப்படல் வேண்டுமென்ற கருத்துடன் கையெழுத்து இயக்கத்தை ஆரம்பித்த நாம் இன்று இராணுவத்தாக்குதல்களின் அமானுஷ்யத்தன்மை கட்டுமீறிச் செல்வதை நோக்கி: தமிழர் பகுதிகளிலிருந்து இராணுவ நிறுவனங்கள யாவும் எவ்வித ஐயத்துக்கும் இடமில்லாத வகையில் உடனடியாக நீக்கப்படவேண்டுமென்று கோருகிறேம்.

“இன்றைய நிலையில் அரசு தமிழ் மக்களுக்கு அளிக்கக் கூடிய நம்பகரமான ஒரே ஒரு உறுதிப்பாடு வடக்கு, கிழக்கு, மலையகப்பகுதிகளிலிருந்து இராணுவமுகாம்களை அகற்றுவதேயாகும். இத்துடன் மலையகத்தின் தமிழ்மக்களுக்கு எதிராக அப்பகுதிகளில் இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டு அவர்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்றும் கோருகிறேம்.” (க)

## ரங்கநாயகி கருத்து

(கொழும்பு)

“தமிழ்மக்கள் பயத்தின் காரணமாகத்தான், தீவிரவாதிகளை ஆதரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறர்கள். மின்கம்பத்தண்டனை போன்றவை தமிழ் மக்களுக்கு தீவிரவாதிகளிடம் இருந்து கிடைக்கும் பெரும் அச்சுறுத்தல் ஆகும்.”

பொத்துவில் 2-வது எம். பி. திருமதி ரங்கநாயகி பத்மநாதன், மனித உரிமைகள் குழு பிரதிநிதி திருமதி ஜூடித், ஜனதிபதி, அமைச்சர்களைச் சந்தித்து உரையாடியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இத்தகவலை அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

இலங்கைக்கான சகல நிதி உதவிகளையும் நிறுத்தும்படி தாம் உலகநாடுகளை கேட்கப் போவதாக திருமதி ஜூடித் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. [ச]

## சேருநுவர சம்பவம்: ‘விடுதலைப்புலிகள்’ விளக்கம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப்பிரதேசங்களில் ஆயுதப்பயிற்சிபெற்ற சிங்களக் குண்டர்களைக் குடியமர்த்தும் திட்டமிட்ட நடவடிக்கைக்கு எதிராகவே கடந்த 19-2-86 அன்று அல்லை-கந்தளாய் வீதியில் சேருநுவர என்ற இடத்தில் தமது இயக்கப் போராளிகளால் கண்ணிவெடி வைக்கப்பட்டதென்றும், இக்கண்ணிவெடிக்கு லொறி ஒன்றில் சென்ற 25 இராணுவத்தினரும், 55 ஊர்காவல்படையினரும் கொல்லப்பட்டனர் என்றும் ‘தமிழீழ விடுதலைப் புலிகள்’ விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

“தமிழ்ப்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் ஆயுதங்களுடன்இனவெறிக்காடையரைக் குடியமர்த்தும் முயற்சிகள் சிறீலங்காஅரசால் காலங்காலமாகமேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே ஊர்காவற் படையினரும், சிங்களக் குண்டர்களும் அரச படையினருடன் இணைந்து திட்டமிட்டு தமிழரை ஒழிப்பதில் ஈடுபட்டு வருவது எமது மக்கள் நன்கறிந்ததே. அண்மைக் காலங்களில் புது முயற்சியாக தமிழ்க்கிராமங்களைத் தொடர்ச்சியாகச்சுற்றிவளைத்து தமிழர்களைக் கைது செய்தும், கொன்று குவித்தும் தமிழ்ப்பெண்களைக் கடத்திச் சென்றும் தமிழினத்தை அக்கிராமங்களிலிருந்து அப்புறப்படுத்திய பின்னர் பயிற்சி பெற்ற சிங்களக்குண்டர்களைக் குடியமர்த்தும் முயற்சிகளும் நடைபெற்று வந்தன.

“இந்த வகையில் கடந்த 19-02-86 அன்றுபயிற்சிபெற்ற சிங்களக்குண்டர்களை இராணுவப் பாதுகாப்புடன் ஆயுதங்களுடன் குடியமர்த்தும் முயற்சியாக அல்லை— கந்தளாய் வீதியில் சேருநுவரஎன்றஇடத்தில் 5 வாகனங்களல் இராணுவத்தினருடன் ஊர்காவல் படையினரும் வந்துகொண்டிருந்தனர். அத்தொடரில் மூன்றுவதாக வந்த அசோக் லேலன்ட் லொறிக்கு கண்ணிவெடிவைத்ததில் கதவுகளிலும் கூடாரத்திலும் தொங்கிக்கொண்டு வந்தவர்களுமாக 25 இராணுவத்தினரும் 55 ஊர்காவல் படையினரும் ஸ்தலத்திலே பலியானர்கள். லொறி சுக்குநூருகியது. அப்பகுதியில் சம்பவம்நடந்ததினத்தன்று நடைபெற்ற ஒரேஒரு தாக்குதல் இதுவாகும்.

“திட்டமிட்ட இக்குடியேற்ற நடவடிக்லகக்கெதிராக எடுக்கப்பட்ட முயற்சி, தமிழ்ப் பகுதிகளை சிங்கள மயமாக்கும் முயற்சிக்கு சாவுமணி அடித்துள்ளது. இத்தாக்குதலின் போது திறமையாக செயல்பட்ட போராளிகளில் ஆறுமுகம், பெரியவன் ஆகிய இரு வீரர்களும் மரணமடைந்தனர்” என்று மேலும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## மக்கள் அவை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசு அண்மைக் காலங்களில் மேற்கொண்டு வரும் இனப்படுகொலையிலிருந்து எஞ்சியிருக்கும் தமிழர்களைக்காப்பாற்றுமாறு யாழ் மாவட்ட மக்கள் அவை வெளி நாடுகளைக் கோரியுள்ளது,

## மரண அறிவித்தல்

### சின்னப்பாபிள்ளை சோமாஸ்கந்தன்

சின்னப்பாபிள்ளை சோமாஸ்கந்தன் காலமாகிவிட்டார். அன்னர் புவனேஸ்வரின் அன்புக் கணவரும், ஹேமமாலினி (மீனு-நோர்வே), ஜமுனு (இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் தந்தையுமாவார். அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வியாழன் (27-2-86) பி.ப. 2-30 மணியளவில் 28ம் இலக்க பண்டாரக்குளம் வீதி, நல்லூர் இல்லத்திலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: திருமதி சோமாஸ்கந்தன்

(C 9 6)

### இராமலிங்கம் காத்தலிங்கம்

இராமலிங்கம் காத்தலிங்கம் காலமானர். இவர் சேதிமணியின் அன்புக்கணவரும், சோதிலிங்கம், டஞ்சலிங்கம், உதயலிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சக்கரவர்த்தியை பெருமகனுமாகக் கொண்டவரும், திரு ஐ. கந்தையாவின் அன்பு மருமகனும், இந்திரஉமாவின் அன்பு மாமனுமாவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-02-86) பி. ப. மூன்று மணியளவில் இல. 74, கண்ணபுரம் (கொட்டடி) இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேம்.

C 975) மனைவி, பிள்ளைகள்.

### திருமதி பாபரு (பொன்னம்மா) சூசைப்பிள்ளை

இளவாலை திருமதி பாபரு பொன்னம்மா சூசைப்பிள்ளை காலமானர். இவர் காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை செல்லையா தம்பதியரின் அருமை மகளும், திரு சவரிமுத்து சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், யசிந்தா (லண்டன்), மனேகரி, மனேகரா (லண்டன்), காலஞ்சென்ற சீலன், றட்ணு (தமிழ்நாடு) ஆகியோரின் அருமைத் தாயாரும், டாக்டர் இம்மானுவல் சேவியர் (லண்டன், மனேச்சர் இராசநாயகம் (பரிஸ்), ருஜி (மக்கள் வங்கி, மன்னர்) ஆகியோரின் அருமை மாமியாரும், யசோதரா (லண்டன்), ஜானகி (லண்டன்), சுறேஸ், சுஜி, சுறேன் ஆகியோரின் அருமைப் பேத்தியும், றெபேட் கிளைவ், மரியநாயகம், ஜெயராஜா, காலஞ்சென்ற செல்வரத்தினம், காலஞ்சென்ற கிராம சேவையாளர் இராசநாயசம் (பிரான்சீஸ்), செல்வநாயகம், ஜெயராணி, காலஞ்சென்ற சவுந்தரம் அமிர்தநாயகம் அழகக்கோன், ரத்தினம், அற்புதம், காலஞ்சென்ற சவுந்தரநாயகம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற திருமதி நீக்கிலாப்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 27-2-86 வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு இளவாலையில் இடம்பெறும்.

கல்லூரி, ஒழுங்கை,
இளவாலை.

C 958

## பல் வைத்தியசேவை அத்தியாவசியசேவை

(கொழும்பு)

பல் வைததியர் சேவை அத்தியாவசியசேவையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

வேலைக்குத் திரும்பாதவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், உடனடியாக சம்பந்தப்பட்ட பல்வைத்தியர்கள் அனைவரும் வேலைக்கு திரும்பும்படியும் அரசு அறிவித்துள்ளது. (ச)

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu, Telephone 22389, 24126

## கிருஷ்ணமூர்த்தி நினைவுதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரம்மஞான சங்கத்தினர், காலஞ்சென்ற தத்துவஞானி ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி நினைவுதினக் கூட்டமொன்றை நாளை மறுதினம்யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

சங்கத்தலைவர் திரு. எம். கனகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் மல்லாக மாவட்ட நீதிபதி திரு. சி வி விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. ஆர். கந்தையா, யாழ். செயலக கணக்காளர் திரு. வி. ராமச்சந்திரன் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

நினைவுதினக்கூட்டம் சனிக்கிழமை காலை 9-30க்கு நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org